

# முத்தமிழ் கலசம்

ISSN 2719 - 2520
இருமாதத்திற்கொருமுறை
நவம்பர் – டிசம்பர் 2020
இதழ் 03

வாழ்தல் இனிது
றிஷா ரஹ்மான்

## இனிக்கும் இன்பத் தீபாவளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் கலசம்

இருமாதத்திற்கொருமுறை

நவம்பர் – டிசம்பர் 2020

இதழ் 03



**ஆசிரியர் : சித்தி வஃபீரா**

editor & publisher : Sithy Wafeera

**கௌரவ ஆசிரியர் : தமிழ்நெஞ்சம் அமின்**

Hon. editor : Tamilnenjam Amine


படைப்புகளின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு. ஆக்கங்களை சுருக்கிட, திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு. நூல்கள் அறிமுகம், மதிப்புரை, விமர்சனங்களுக்கு 2 நூல்கள் அனுப்புதல் அவசியம்.


படைப்புக்கள் அனுப்பவேண்டிய முகவரி:

email : muththamizh.kalasam@gmail.com

The editor of "Muththamizh kalasam",

23, Amarasekara Mawatha,
Colombo 05., Sri lanka




வானம் அளந்தபுகழ் வையம் அளந்த குரல்
தேனை அளந்தமனச் செம்மலே ஏன்எங்கள்
கண்ணின் மறைந்தாயோ கைகூப்பி நெஞ்சுருகிப்
பண்ணிசைத்தோம் வாழ்ந்திடும்நின் பாட்டு!

**தமிழ்நெஞ்சம் அமின்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பக்கம்




அன்புக்குரிய வாசகர்களே

வணக்கம்!

இன்னும் கொரோனாத் தொற்று உலகைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது ஓய்ந்த பாடில்லை. ஆனால் பெரும்பாலானவர்கள், அசிரத்தையாகவே தமது அன்றாடக் கடமைகளில் ஈடுபட்டு வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

சமூக இடைவெளி பேணல், முகக் கவசம் அணிதல், அடிக்கடி கைகால் கழுவுதல், தகுந்த பாதுகாப்பான முறையில் பணத்தைக் கையாளுதல் போன்ற சுகாதார முறைகள் அருகி வரும் காலகட்டத்தில் இருக்கிறோம் என்பது, மனதைச் சற்று அச்சம் கொள்ளச் செய்வதை யாராலும் மறுக்க முடியாது.

இன்றும் பல உலகநாடுகள் தம் வழமையான தொழிற் பாடுகளைக் கவனிக்க முடியாத சூழலில், பல்லாயிரக் கணக்கான அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கும் துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளன.

நாம் நமது அன்றாட பழக்கவழக்கங்களில் சில முக்கிய விடயங்களைக் கடைப்பிடித்தாலே போதும். எந்நோய்த் தொற்றிலிருந்தும் நம்மைக் காத்துக் கொள்வது நடைமுறைச் சாத்தியமாகி விடும். இது ஒன்றே கொரோனா போன்ற கொடிய நுண்ணுயிர்களுக்குச் சாவுமணியடித்து காலாவதியாக்கி விட வல்லது.

சுகாதாரத்தை நல்முறையில் பேணுவதானது, எம்மை எப்போதும் சுகதேகிகளாக வைத்திருக்கும்.

ஆகவே தகுந்த முறையில் சுகாதாரத்தைப் பேணி ஓர் ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவோம்.

வருமுன் காப்போம். வளம் பெறுவோம்.

நன்றி!

– சித்தி வ.ஃபிரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைக்கும் இன்று தீபாவளி

ஏழைக்கும் இன்று தீபாவளி தான்
ஒளி ஏற்றவே எண்ணெய்க்குக்கூட
இல்லை ஓர் வழி...!

வாளி வாளியாகப் போகிறது
கடை உணவு
பணம் படைத்தவர் மாளிகைக்கு...!

புளி ரசத்துடனாவது சாதம் போட
இன்னும் வழி கிடைக்க வில்லை
அம்மாவின் கரங்களுக்கு...!

குழி விழுந்த கன்னத்தை
நிரப்புகின்றது கண்ணீர்
ஏறெடுத்துப் பார்க்கமாட்டாாள்
தந்தையோ கூனி குறுகிய வண்ணம்
அமந்திருக்கார் திண்ணையிலே...!

பட்டுத் துணி உடுத்தி
பட்டாசு கையில் எடுத்து
குதூகலமாகப் போகின்றார்கள் தெருவில்
சேர்த்து வைத்தவரின் செல்வங்கள்...!

குச்சுமிட்டாய் கையில்
வைத்துக் கொண்டு,
சிந்திய மூக்கை
துடைத்து விட்டு,
ஆயிரம் ஏக்கங்களோடு
தெருவோரமாக. நின்று,
வேடிக்கை பார்க்கின்றது.
ஏழை விட்டு செல்லங்கள்...!

அண்டை வீட்டாரும்
அண்ட விடுவதில்லை.
தன் மக்களை அண்ட
போட்ட உடையும்
அழுக்கு படிந்த உடலும் கண்டு...!

தெருவிலே வாண வெடி
தவறுதலாக விழுந்து
எரிகிறது ஏழையின் குடில்...!

எந்நாளும் போல்
இந் நாளும் புறப்பட்டான்
கஞ்சனிடம் கெஞ்சவே
பிச்சை எடுக்கும் பச்சையப்பன்...
ஏழைக்கும் இன்றுதானே தீபாவளி..!!

ஆர்.எஸ்.கலா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வள்ளுவர் குறளும் வாரியார் வாக்கும்




வள்ளுவர் குறளும்வாரியார் வாக்கும் நூல் கிடைக்கப் பெற்று வாசித்தேன். மகிழ்ந்தேன். தேன் என சுவைத்தேன். கொஞ்சும் தமிழில் விஞ்சும் சீரெடுத்து வஞ்சியவள் ( பூங்குழலி ) வார்த்திட்ட வாழ்வியல் சார் பெட்டகம் இந்நூல்

வாய்மையை வகுத்த வள்ளுவரையும், வாக்கு நெறி கொண்ட வாரியாரையும் இணைத்து இருவரின் ஆழ்ந்த அறநெறி சிந்தனைகளை வாரி வழங்கி இருக்கிறார் இந்நூல் ஆசிரியர்.

கன்னல் சுவையாய்க் கன்னித் தமிழில் மிக அழகாகவும், மிக நேர்த்தியாகவும் கொண்டு செல்லும் உரைநடையின் பாங்கு, ஆழ்ந்த வாசிப்புத் திறன் இருந்தால் மட்டுமே இப்படி ஒரு நூலைப் படைக்க முடியும். பல இலக்கண, இலக்கியச் சான்றுகளோடு தெளிந்த நீரோடை போன்று எளிய நடையில் அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் இந்நூலை கொண்டு செல்கிறார் ஆசிரியர்.

ஒவ்வொரு தலைப்பிற்கும் உரிய பல பொருள் நிறைந்த சொற்களைத் தலைப்பின் கீழ்க் குறிப்பிட்டுள்ளமை பாராட்டுதலுக்கு உரியது.

ஆசிரியர் குறிப்பிட்டுள்ளது போல் எத்தனையோ இன்பம் இந்நாட்டிலே உண்டு என்றாலும் மிகப்பெரும் இன்பம் வாசித்தலில் உண்டு. உண்மை. அதைவிட இன்பம் படித்ததைப் பலருக்கும் பகிர்வதிலே ஆனந்த மகிழ்வும் உண்டு. அதை நூலாசிரியரின் எழுத்துக்களில் காண முடிகின்றது.

ஆசையை அகற்றி, பேராசையை நீக்க துன்பம் தொடராது என்பதை நுண்ணிய கருத்துகள் மூலம் விளக்கம் அளிக்கிறார்.

சினம் காக்க, உண்மை பேசு, ஒழுக்கம், நாகாக்க, தியாகம் செய், அருளே தியாகம், அழுக்காறு, சிறியோரையும் போற்று, பசித்தோருக்குக் கொடு உள்ளிட்ட பல தலைப்புகளில் குறிப்பிட்டுள்ள கருத்து களும், கதைகளும் நம் ஆழ் மனத்துள் பதிவன.

நான் என்று சொல்லாதே எனும் தலைப்பின் கீழ் எழுதப்பட்ட கருத்துக்கள் போற்றுதற்குரியது. நான் எனும் எண்ணம் கொண்டவர்களால் என்றும் வளர்ச்சியை அடைய முடியாது. இவர்களால் சமுகத் திற்கும் பயன் ஏதுமில்லை. எனவே நான் என்பதை விடுத்தால் வாழ்வில் மகிழ்வடையலாம் என் கின்ற கருத்தைச் சிறப்பாகக் காட்டியுள்ளார்.

கோபத்தையும், ஆசையையும், சினத்தையும் அடக்க கற்றுக் கொண்டோ மானால்... பொறாமை குணம் மறைந்து அனைவருட னும் உறவாகவும், நட்மாகவும பழக முடியும். அப்படி நடக்கும் நிலை உருவானால் மனித நேயம் நம்முள் பரவத் தொடங்கும்.

ஒவ்வொரு தலைப்பும் நமக்குப் படிப்பினையைத்தருவதாகஅமைந்துள்ளது. பொறாமையும், போட்டியும் நிறைந்த இக்காலச் சூழலில் இந்நூலை வாசித்து மனத்தூய்மை பெறலாம் என்பது என் கருத்து.

சிறந்த எழுத்தாற்றல், அருவியாய் கொட்டும் பேச்சாற்றல், சிறந்த மாணவர் களை உருவாக்கும் ஆசிரியப் பணி, தமிழ் ஆளுமையும் கொண்ட திருமதி. வே.பூங்குழலி பெருமாளை வாழ்த்தி மகிழ்கிறேன். மென்மேலும் தொடரட்டும் தமிழ்ப்பணி.

**திருமதி. க. மலர்வாணி ஜெயராஜ்**
பிரான்சு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊரடங்கு !

வெறிச்சோடியத் தெருக்களில்
உதிர்ந்த இலைகளின் பயணிப்பு
கால்களை நீட்டியபடி
நடுச்சாலையில்
படுத்துறங்கும் நாய்கள்
அங்கொன்றும் இங்கொன்றுமாக
மைனாக்கள் மெல்ல நடக்கின்றன
சாலை முழுக்க இரவு மலர்ந்த
மரமல்லிப் பூக்களின் வாசம்
கிளைக்கு கிளைத் தாவும்
குரங்குகள் கூட்டம்
எசப்பாட்டு பாடியபடி
இசைபாடும் குயில்கள்
மனிதக் குறுக்கீடுகள் இல்லாத
நிதர்சனச் சூழல்
ஜன்னல் கம்பிகளுக்குப்
பின்னாலிருந்து காட்சிகளை
ரசிக்கின்ற என்னிடம்
கையசைத்து மகிழ்கிறது
இயற்கைச் சூழலை மீட்டெடுத்தப்
பெருமிதத்தில் ஊரடங்கு !

**கா.ந.கல்யாணசுந்தரம்**
சென்னை

## தன்முனைக் கவிதை

●
உன்னை நினைக்காதிருக்க
மௌனத் தவமிருக்கிறேன்.
உனக்குப் புரையேறினால்
நான் பொறுப்பல்ல!

●
உன்னுடனான ஊடலில்
உவகை பொங்குகிறது.
கூடலின் பேரழகைச்
சுமக்கும் பெருங்காதலாய் ...

**அன்புச்செல்வி சுப்புராஜூ**



## வாழ்வியல் உண்மைகள்

**சஞ்சய்**

நாம் என்ன உடை அணிகிறோம், என்ன வேலை செய்கிறோம், எவ்வளவு பணம் ஈட்டுகிறோம், பார்ப்பதற்கு எப்படி இருக்கிறோம் இவற்றையும் தாண்டி நம் தன்னம்பிக்கையே அடுத்தவர் கண்களில் நாம் எப்படி தோன்று கிறோம் என்பதை நிர்ணயிக்கிறது!

வாழ்வு என்பது எல்லோருக்கும் ஒரே போல் அமைவதில்லை! இது பிறப்பிலிருந்தே அப்படித்தான். நம்மில் சிலர் படித்த குடும்பத்தில் பிறந்திருப்போம், சிலர் பணக்கார குடும்பத்தில், சிலர் வறுமையில், சிலர் பள்ளி வாசமே காணாத குடும்பத்தில் என, இதில் எதுவும் நம் தவறு அல்ல.

இயற்கை எல்லாவற்றையும் எல் லோருக்கும் பொதுவில் தான் வைத்தது; வைத்திருக்கிறது! மனிதன் பணத்தைக் கண்டு பிடித்தான், இப்படிப்பட்ட பல பிரிவினைகளை, வேற்றுமைகளை உருவாக்கினான். அதைத் தக்க வைத்துக் கொள்ள ஒரு மனிதனின் அடையாளமாக மதத்தை ஆக்கினான், ஒருவரின் அடிப்படை அடையாளமான பெயரை வைத்தே அவனின் மதத்தைக் கண்டுபிடிக்க கூடியதாக மதம் மனித வாழ்வில் இரண்டற கலந்து விட்டது. அடுத்ததாக பிரதேசங்களை பிரித்து அதை நாடுகள் ஆக்கினான், அதன் பாதுகாப்பை உறுதிப் படுத்த மண் மீதும் மனித உயிர் மீதும் முடிச்சு போட்டான், அதன் பாதுகாப்புக்காக இறப்பவர்களுக்கு வீர நாமங்கள் சூட்டினான், பின்னர் அதையே மதத்தின் பாதுகாப்புக்கும் பயன்படுத்தினான், இப்படிப் பல சொல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரி, நம் வாழ்விற்கு வருவோம். நாம் எந்த நிலையில் பிறந்திருந்தாலும், வளர்ந் திருந்தாலும், நாம் ஆளான பிறகு, நேற்றைக்கு இன்று நாம் எவ்வளவு அடிகள் முன்னெடுத்து வைத்திருக்கிறோம் என்பதே நம்மை அளக்கும் அளவு கோலாக வேண்டும்.

முன்னெடுத்து வைப்பது என்பது பணம் பற்றிய விஷயம் மட்டுமில்லை. நம் அறிவு விசாலத்தில், அன்பு செலுத்துவதில், மனிதர்களின் நட்பை சம்பாதித்ததில் என எல்லாவற்றிலும் தான்.

இங்கு எங்காவது வழி யில் சறுக்கியிருக்காலாம். இருந்த இடத்திலிருந்தே பின்னுக்குத் தள்ளப் பட்டிருக்கலாம். நம் வாழ்வில் நடப்பது எல்லாமே நம் கைகளில் மட்டுமல்ல. சில நம் தவறுகளினால், சில மற்றவர்களினால், சில இயற்கையினால் என பாதிப்பு கள் ஏற்படலாம்.

ஆனால் அந்த பாதிப்பு களிலிருந்து எவ்வளவு சீக்கிரம் வெளி வருகிறோம், அதிலிருந்து கற்றுக் கொண்டவைகள் என்ன என்பதே நம்மை அடுத்த அடிக்கு நகர்த்தும். முடங்கி போனால் இத்தனை வருடங்களில் நாம் எதையுமே கற்கவில்லை என்றாகி விடும்.

ஆக நாம் இருந்த இடத் திலிருந்து, இல்லை நாம் விழுந்த இடத்திலிருந்து எத்தனை தூரம் முன்னேற்றம் கொண்டி ருக்கிறோம் என்ற ஒன்றை மட்டுமே அளவு கோலாக நிர்ணயித்துப் பார்க்க நம் மேல் நமக்கே மரியாதையும், இவ்வளவு செய்திருக்கிறோம், இனி எவ்வளவு செய்யலாம் என தன்னம்பிக்கையும் பிறக்கும், மேலும் முன்னேறவும் தூண்டும் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை.

Sanjiaiy Gen Vktb



# உறவே உயிரே

மலருக்கு மலர் கொடுத்துத் தொடங்கிய காதல்
புலரும் காலைப் பொழுதாய் என்றுமுள்ள காதல்
மலரும் மலர்களிலெல்லாம் தோன்றும் முகமே
நிலவும் வானும் போலே ஒட்டி உறவாடும் காதல்

காதல் உறவில் தோன்றிய என்னுயிரே உணர்வே
சாதல் வரை தொடரும் இது அன்புக் காதலாகுமே
நாதம் இசையாய் நாடி நரம்பெல்லாம் இசைக்குமே
பாதம் முதல் முடி வரை உணரும் அன்புக் காதலிது

உயிரில் உயிராய் ஒன்றிணைந்து உருகிய அன்பே
தயிரில் வெண்ணெய் போல் நானிருப்பேன் மலரே
அயிரை மீனைப்போல் ருசிக்கும் உறவில் வந்தது
துயிலிலும் விட்டுப் போகாத காதல் கனவுகளாய்

உறையும் இதயம் உன்னிதயத்தோடு ஒன்றாகும்
மறையும் காதல் இதயச் சுவற்றுக்குள்ளே இனிதாக
இறையும் இதற்குப் பாதுகாப்புகள் செய்து உதவும்
முறையான உண்மைக் காதலிது உயிரானதே.

நீயின்றி நானில்லை இவ்வுலகில் என்றென்றும்
காயின்றி கனியேதும் கனிந்ததுண்டா உலகில்
தாயின்றி சேயொன்று உலகில் உதித்ததுண்டா
வாயின்றி வயிறு நிறைந்ததில்லை உறவே உயிரே.

**ராம்க்ருஷ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலின் முகவரிகள்

## ஆசிரியர் : கவிஞர்.செல்லம் ரகு
## விமர்சனம் : கவிநிலா மோகன் தஞ்சாவூர்

ஆசிரியர் ஹோமியோபதி மருத்துவர், கவிஞர், மனநல ஆலோசகர், பத்திரிக்கைகளில் ஹைக்கூ கவிதைகள், புதுக்கவிதைகள் கட்டுரைகள் நூல் விமர்சனங்கள் என்று பன்முகம் கொண்ட இலக்கிய ஆர்வலர். ஹைக்கூ கவிதைகள் மேல் கொண்ட தீராத காதலால் நிறைய இதழ்களிலும் முகநூல் குழுமங்களிலும் எழுதி வருபவர். நிச்சயமாக ஒருநாள் முழுநேர இலக்கியவாதியாக வலம் வருவார்...




இவர் எழுதிய நூல்கள் ''நினைக்க முளைக்கும் சிறகுகள்'', ''இனிதிலும் இனிது காதல்'', ''அன்பென்று கொட்டு முரசே'', ''விடியலின் முகவரி கள்'', ''உணவே மருந்து - ஹைக்கூ கதைகள்.''

இந்த நூலுக்கு சிறப்பான ஒரு பேரழகு அணிந்துரை வழங்கியிருக்கிறார் என் நீண்ட கால இலக்கிய நண்பர் மு. முருகேஷ்., கவிஞர். ச.மோகன் ராசு, இனிப்பான வாழ்த்துரை வழங்கி சிறப்பித்துள்ளார்.

இந்த புத்தகத்தில் ஹைக்கூ கவிதை களோடு சென்ரியு, லிமரைக்கூ, வகைகளும் கலந்து அழகூட்டுகின்றன.

வாருங்கள்...

முகவரியை விசாரிப்போம். விடியலின் தேசத்திற்குள் நுழைவோம். அங்குள்ள இயற்கையை அழகுகளை இன்பங்களை ரசிப்போம். அவலங்களை அநீதிகளை தட்டிக் கேட்போம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேச்சல் நிலம் தேடிச்சென்ற
மாடுகள் மாலையில் திரும்பின
நெகிழிப்பை மென்றபடி"

இன்றைய அவலம் இது. எங்கு பார்த்தாலும் நெகிழிப் பைகள்... எந்த கடைக்கு என்ன வாங்க போனாலும் கொடுப்பது நெகிழிப்பைகளில். ஏன் காப்பி டீ சட்னி சாம்பார் எல்லாமே அதில்தான். யாரும் பைகள் எடுத்துப் போவதே கிடையாது கடைகளுக்கு. உபயோகித்து அப்படியே வீதியில் தூக்கிப் போட அது மண்ணில் ஆற்றில் குளத்தில் நதியில் கடலில் ஏன் சாக்கடையில் எங்குப் பார்த்தாலும் கிடக்கிறது. இது மக்காத குப்பைகளாய் மண்ணை நீரை பாழ்படுத்துகின்றன. இதனால் சுற்றுப்புற சுகாதாரம் கெட்டு மக்களுக்கு ஆரோக்கியக்கேடு வருகிறது. இதை எரித்தால் காற்று மாசு படுகிறது. மண் கெட்டு மண்ணடிநீர் பாதிக்கிறது. ஓடும் சாக்கடையை அடைத்து அசுத்தநீர் தேங்கி கொசு உற்பத்தியாகி கடித்து யானைக்கால் நோய் வருகிறது. இதைத் தற்சமயம் அரசாங்கம் சட்டம் போட்டுத் தடை செய்திருக்கிறது.

இந்த மாடுகள் பசுமை கெட்டுப் போனதால் புல்வெளிகள் இல்லாததால் காகிதம் சுவரொட்டிகள் நெகிழிப் பைகள் இவற்றைப் பசியில் தின்னு கின்றன. நெகிழிப் பைகள் தின்று வயிறு உப்பி வலி வந்து வயிற்றுப்போக்கு வந்து மாடுகள் இறந்துப்போன சம்பவங்கள் உண்டு. மாடு வளர்ப்பவர் எச்சரிக்கையோடு வளர்க்க வேண்டும். மற்றவர்கள் சமூக அக்கறையோடு கோமாதாக்களை காக்க துணைபுரிய வேண்டும்.

இந்த விழிப்புணர்வு ஏற்படுத்த கவிஞர் ஆதங்கப்படுவது சமூகத்தை திருத்தப் போராடத் துடிப்பது தெரிகிறது.

"ஒவ்வொரு ஓய்வு நாளையும்
ஓய்வின்றிக் கொல்கிறது
தொலைக்காட்சி".

"அதிக வெயில்
தார்ச்சாலையில் உருகி ஓடுகிறது
கானல் நீர்."

"நீண்டநாள் பகை
நொடியில் தீர்ந்து போகிறது
ஒரே ஒரு புன்சிரிப்பு."

"பரண்மீதிருந்த பழைய புத்தகம்
எடுக்கும்போது கனக்கிறது
அப்பாவின் நினைவுகள்."

"நேரில் காணவில்லை
வரைபடத்தில் மட்டும் தெரிகின்றன
ஆறுகள்."

"நடை பயிலும் குழந்தை
ஒவ்வொரு அடியிலும் பதறும்
அன்னையின் மனம்."

'சகுனம் சரியில்லை
குறுக்கே பாய்கிறது மகிழுந்து
செத்தது பூனை."

"ஜன்னல் கம்பிகள்
துளித்துளியாய் வழிகிறது
கன்னியின் கனவுகள்."

"கோயில் திருப்பணி
முதலில் சுத்தம் செய்கிறார்கள்
குருவிக்கூடுகளை."

"திடீர் மழை
சாலையில் பெருகி ஓடுகிறது
சாக்கடை நீர்."

"தொலைவில் கேட்கிறது
அவசர ஊர்தி ஒலி
படபடக்கும் மனது."

இது அன்றாடம் சாலையில் எல்லோரும் பார்ப்பது தான். மனித நேயம் உள்ள யாராலும் சும்மா கடந்து போக முடியாது. ஏன் ஆயிரம் சிந்தனைகள் வந்து வந்து மோதும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலருக்கு படபடப்பு வரும். சிலருக்கு மயக்கமே வரும். சிலருக்கு ஒரு சோகம் தொற்றிவிடும்.

ஏன் இப்படி ஒரு நோயாளியை ஏற்றிச் செல்கிறதா கர்ப்பிணியா விபத்தில் சிக்கியவரா வயதானவரா இருதய நோயாளியா சிறுநீரக நோயாளியா... ஆணா பெண்ணா குழந்தையா சிறுவயதா வயதானவரா? எங்கிருந்து வருகிறது எங்கே போகிறது? இல்லை இறந்த உடலோ எந்த ஊருக்கு போகிறதோ கிட்டயோ எட்டியோ இருப்பவரோ? இல்லாதவரோ அவங்க பெற்ற பிள்ளை கூட இருக்கோ இல்லையோ? இல்லை, வெளிநாட்டில் இருக்குமோ? ஏன் செத்தாங்க எப்படி இப்படி ஆச்சு. படிக்கும் வாசகனை கூட்டுப் படைப்பாளியாக்கி சிந்தனைகளைத் தூண்டி எண்ணவோட்டத்தை வேக மாக்குகிறார் கவிஞர்.

இப்படி ஒரு காட்சியை காணும் அனுபவம் ஹைக்கூவாக வரும்போது நம்மை அசைக்கிறது. உணர்வு பிரவாகமாகி மூழ்கவைத்து திக்குமுக்காட வைத்து வேடிக்கை பார்க்கும். இதுதான் ஹைக்கூ வின் வெற்றி சூட்சுமம். கவிஞருக்கு இது கைவந்த கலையாக இருக்கிறது.

"சூழும் இருள்
மெல்ல எட்டிப் பார்க்கிறது
மனதில் பயம்."

"வெள்ளையடித்த சுவர்
வருத்தமாய் தடவுகிறார் தாத்தா
மறைந்த பேத்தி கிறுக்கல்."

"உயிர் தந்த பூமிக்கு
ஓயாமல் நன்றி செலுத்துகிறது
பூத்தூவும் மரம்."

"அறுவடை என்றதும்
உடன் நினைவுக்கு வருகிறது
மனைவியின் அடகு வளையல்."

"இமைகள் மூடினாலும்
விழித்துக் கொள்கின்றன
காதல் நினைவுகள்"

"பள்ளத்தில் சரிந்த லாரி
பாய்ந்தோடுகிறது ஆறாக
பிறப்பிடத்தை நோக்கி தண்ணீர்."

"தனிமையில் பயணம்
வழித்துணையாக வருகின்றன
நிலாவும் நினைவும்."

"நினைவூட்டிச் செல்கிறது
தென்றலாய் வீசும் காற்று
உனக்கும் எனக்குமான காதலை."

"பார்வை வரங்கள்
உலகையே மாற்றுகிறது
காதல்."

கவிஞரின் கவிதைகளை படிக்கப் படிக்க புதிய திசைகள் வருகின்றன. புதிய கோணங்கள் தெரிகின்றன. புதிய நோக்கங்கள் புரிகின்றன.

விடியலின் முகவரிகள்
ஆசிரியர் : கவிஞர்.செல்லம் ரகு
விலை : 120/-
வெளியீடு : அகதி வெளியீடு
வந்தவாசி. இந்தியா
தொடர்பு : +91 9443775974





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசகர் கடிதங்கள்

பாரதியும் இஸ்லாமும் அழகிய நடையில் கதைச் சொல்வதுபோல அமைந்திருந்தது சிறப்பு. அறியாத விஷயங்களைத் தெரிந்துக் கொள்ள முடிந்தது.

**சோமநாதன், புதுக்குடியிருப்பு**

யாழ் மீட்டும் கண்ணு கவிதை அழகாகப் புனையப்பட்டிருந்தது. அருமை!

**கானப்ரியன், சென்னை**

கறை படிந்த கண்ணாடி காலத்தை படம்பிடித்துக் காட்டியது நம் முன்னாடி.

**கரையான், சாய்ந்தமருது**

செப்டம்பர் - அக்டோபர் இதழ் சிறப்பம்சங்களை உள்ளடக்கி இருந்தது மகிழ்ச்சி.

**ஆர்.மனோரமேஷ், ஹட்டன்**

பாரதியார் கட்டுரை தந்த விஷயங்கள் எனக்கு முற்றிலும் புதிதாய் இருந்தன. இது போன்ற கட்டுரைகளை எதிர் பார்க்கிறேன்.

**லட்சுமி பாலா, வட்டக்குறிச்சி**

அனுப்பி மூன்று மாதங்கள் கழித்து என் கவிதை இதழில் இடம் பெற்றது கண்டு பேரானந்தம் கொண்டேன்.

**றிஸ்லா, கண்டி**

படித்தேன். சுவைத்தேன். அத்தனையும் அறுசுவை விருந்து. நானும் ஆக்கம் அனுப்பியுள்ளேன்.

**செங்குட்டுவன், இராமேஸ்வரம்**

பயனுள்ள ஆக்கங்கள். எப்போது அச்சிதழாகக் கிடைக்கும்?

**வஹ்ஹாப், புத்தளம்**

தங்களைபோன்ற நல்லுள்ளங்களின் உதவிகள் கிட்டுமானால், விரைவில் வரும். நன்றி!

**ஆசிரியர்**

இரு இதழ்களையும் வாசித்தேன். அருமை. தலைப்பை கடைசியில் சொன்ன சிறுகதை படிப்பினை.

**இர்ஷாத் அஹமது, நாகை**

அட்டைப்படமே அட்டகாசம். வரைந்தவர் பெயரையும் பிரசுரிக்கலாமே. நேர் மறையான எண்ணங்களுக்கு வித்திடும் 'வாழ்தல் இனிது' தொடர் கட்டுரை சிறப்பு. கிராமத்தில் ஒருநாள், மறைந்து போன மரபுகள், மனிதநேயம் போன்ற கவிதைகளும் 'மரணவிளிம்பில் நான்' கதையும் சூப்பர். எழுதிய எல்லோருக்கும் வாழ்த்துகள்.

**செல்வி துரை, விருதுநகர்**

இதழ் முழுவதையும் வடிவமைத்து அழகு செய்யும் தமிழ்நெஞ்சமே அட்டைப்படத்தையும் செய்தவர்.

**ஆசிரியர்**

தொடர்கள் கதைகள் வெளியிடலாமே...

**வனிதாமணி, திருப்பூர்**

இப்போதைக்கு அந்த எண்ணமில்லை.

**ஆசிரியர்**

வாசகர் கடிதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்தல் இனிது

## நிஷா ரஹ்மான்



வாழும் நாட்கள் ஒவ்வொன்றும் கடவுள் நமக்குக் கொடுத்த வரம்.

நமக்கான வரங்களை கேட்டு வாங்கிக் கொள்ளவே இவ்வாழ்க்கை. சாபங்களை வரவேற்காமல் சந்தோஷங் களுக்கு வழி அமைப்போம். நம்முடைய உள் மனத்தின் அமைதிக்கான சாவி வேறெங்கும் இல்லை, நம் கைகளில் தான் உள்ளது. திறப்பதும், மறுப்பதும் நம் விருப்பம்.

நேர்மறை எண்ணங்களுடன் இருந்தால், எத்தகைய பிரச்சினையாக இருந்தாலும் சமாளித்து மீண்டு(ம்) வரலாம்.

மனம் நிலைகொள்ளாமல் தவிக்கும் போதும், உள்ளுக்குள் ஆழமான ஒரு காயத்தால் ஏற்பட்ட வலி சற்றும் குறையாமல் இருக்கும் போதும் என்ன செய்யலாம்?

மனதைத் திசை திருப்புங்கள்.

உங்களைஅறியாமலேசிறுகச் சிறுக எதிர்மறை எண்ணங்களை வளர விட்டிருப்பீர்கள். அவற்றை முதலில் உங்கள் மனதில் இருந்து முற்று முழுதாக நீக்கிவிடுங்கள்.

நீங்கள் என்ன சொன்னாலும் காது கொடுத்துக் கேட்க கூடிய நெருங்கிய நண்பரோ உறவினரோ இருந்தால் அவர்களிடம் மனம் விட்டுப் பேசுங்கள்.

வளர்ப்புப் பிராணி வீட்டில் இருந்தால் அவற்றுடன் அதிக நேரம் செலவிடுங்கள்.

உடற்பயிற்சி அல்லது பூங்கா விற்குச் சென்று நடைபயிற்சி செய்யத் தொடங்குங்கள்.

புது வகையான உணவை சமைத்து சாப்பிடுங்கள்.

புதிய எந்த விஷயத்தையாவது கற்றுக் கொள்ளுங்கள்.

உங்களால் முடிந்தால் மற்றவர் களுக்குச் சொல்லிக் கொடுங்கள்

நல்ல சொற்பொழிவுகளை செவி மடுத்துக் கேளுங்கள்.

இனிப்பு பலகாரங்களை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்

இவை எல்லாம் வாழ்தலுக் கான பற்றினை உங்களுக்கு ஏற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தும். பழைய நினைவுகள் காலப் போக்கில் மறையத் தொடங்கி மனத் தில் உற்சாகம் மீண்டும் வரும்.

சும்மா இருக்காதீர்கள். சும்மா இருக்கும் மனது சாத்தானின் பள்ளிக்கூடம்.

ஏதாவது மனதிற்கு பிடித்த வேலைகளில் ஈடுபடுவது நன்று. சிறந்த புத்தகங்களை வாசிக்கலாம். கலையார்வம் உள்ளவர்கள் அதற்கான பணிகளில் கவனம் செலுத்தலாம். வீட்டு வேலைகள் வீட்டுத் தோட்டம் இப்படி ஏதாவது ஒன்றில் மனதை ஈடுபடுத்தலாம்.

வாழ்வில் இழப்புகள், துயரங்கள், பிரச்சினைகள் என்பன தவிர்க்க முடியா தவை என்று புரிந்து கொள்ளுங்கள்.

எனவே உணர்ச்சிகளை வருத்தும் நிகழ்வுகளில் மனதைத் தளர விடாதீர்கள். காலப்போக்கில் காயங்கள் மாறிவிடும்.

பயணம்செய்யுங்கள்.மனதுக்கு மகிழ்வளிக்கும் சில விஷயங்களுள் ஒன்று, இயற்கையுடன் சற்று நேரம் மனம் ஒன்றியிருப்பதுதான். அருவி, மலைச் சாரல், கடல், தொன்மையான கட்டிடங்கள், கோவில் கோபுரங்கள், ஸ்தூபிகள் போன்ற அழகியல் விஷயங்களில் ஈடுபடுகையில் மனம் எதிர்மறையாகச் செல்லாமல் நேராக இயங்கும்.

நம்மை மீறிய சக்தியான இயற்கையை தரிசிக்கும் போது, மனித வாழ்க்கை எவ்வளவு குறுகியது என்று நினைத்து வாழும் காலம் வரை வாழ்க்கையை இனிமையாக கழிக்கத் தோன்றும்.

பயணம் மனதை விசால மாக்கும். எண்ணங்களை விரிவடையச் செய்யும். குறிப்பிட்ட வாழ்வியல், சூழல்களில் சலித்துப் போன மனதுக்கு ஒத்தடம் அளித்து மீண்டும் உற்சாகமாக பயணம் செய்யத் தூண்டுகோலாக இருக்கும் .

எதிர்மறை எண்ணங்களை போக்குவது துணியைத் துவைத்து காய வைப்பது போல் அத்தனை சுலபமானது அல்ல. ஆனால் துணியில் ஏற்பட்ட கறை நன்றாக துவைத்த பின், சுத்தமாவதைப் போல மனதையும் தெளிவாக்க முடியும்.

ஒரு வெள்ளைத் தாளை எடுத்து உங்கள் மனதை கஷ்டப்படுத்தும் விஷயங்களை வரிசையாக எழுதுங்கள். அதன் பின் அந்தத் தாளை எரித்து சாம்பலாக்கிவிடுங்கள்.

உள்ளே உறைந்து கிடக்கும் குப்பையான நினைவுகளை இப்படி அகற்றுவதன் மூலம் நாளாவட்டத்தில் அகத்திலும் துயர் நீங்கி மனம் புத்துயிர் பெறும்.

தினமும் யோகா அல்லது தியானம் செய்யத் தொடங்கினால், எதிர்காலத்தில் இது போன்ற எந்த பிரச்சினை ஏற்பட்டாலும் எவ்வித தன்முனைப்பும் இன்றி எதையும் ஏற்றுக் கொள்ளும் பக்குவம் ஏற்படும். அதைத் தினசரி ஒரு பாடமாக ஏற்றுக் கொள்ளுங்கள்.

மன அழுத்தத்தை வளர விடாதீர்கள். அது உங்கள் பலத்தை கொஞ்சம் கொஞ்சமாகக் குறைத்துக் காலப்போக்கில் உங்களை முற்றாக பலவீனமாக மாற்றிவிடும்.

கவலைகள், பிரச்சினைகள் எந்தவொரு தனிநபருக்கு மட்டும் உரியதல்ல. உலகில் மானிடராய்ப் பிறப்பெடுத்த அனைவருக்கும் பொது வானது அவை.

ஆகவே, எதுவும் கடந்து போகும் என்கிற நிலைப்பாட்டில் மேற் கொண்டு வாழ்க்கைப் பாதையில் பயணத்தைத் தொடருங்கள்.

"இனிது இனிது.
வாழ்தல் இனிது"

நற்சிந்தனைகள் தொடரும்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்திருத்தல் சுகம்

நானும் காத்திருக்கிறேன்!
நிறைய...
வானம் இருளும் போது,
மண்ணைத் தொடும் முதல்
மழைத்துளிக்காக...

பறக்கும் வண்ணத்துப்பூச்சி
பூவிலமர்ந்து இளைப்பாறும்
இனிய நொடிக்காக...

வேர்க்கும் போது முகம் துடைக்க வரும்
குளிர்த் தென்றலுக்காக...
நடு இரவில் விழிப்பு வந்ததும்
வரப்போகும் விடியலுக்காக....

எனைப்பார்க்கின்ற போது உன்
இதழோரம் விரியும் புன்னகைக்காக ...

நான் குனிந்த பின்
நீ பார்க்கும்
உன் ஓரவிழிப் பார்வைக்காக...

உன் மௌனங்கள் உடையப்போகும்
அந்த பொன்னான நிமிஷத்திற்காகக்
காத்திருத்தலின்
சுமை தெரியும் எனக்கு...

உனக்கான காத்திருப்பில் மட்டும்
உயிருக்குள் ஊடுருவும்
இன்னிசையாய்....
ஒரு சுகம் நிறைகிறதே...
ஏனென்று காரணம்
சொல்வாயா என் அன்பே ?



**ராஷிட்**
(கொல்லம்)

# யாருக்குச் சொந்தம் இந்த உலகம்

ஏற்றத்தாழ்வுக்கும்
ஏழ்மைக்குமான
உலகம்..

சுரண்டலுக்கும்
சூதுவாதுக்குமான
உலகம்...

சுயமரியாதையைச்
சுட்டெரிப்பதற்கான
உலகம்...

ஒவ்வாமையை
கற்பிக்கவேயான
உலகம்...

தர்மச்சக்கரத்தை
தடம்மாற்றுவதற்கான
உலகம்...

உறவாடிக்கெடுத்தலை
ஏற்படுத்திடவேயான
உலகம்...

சர்வாதிகார
சதிகாரருக்கான
உலகம்...

போர்க்களத்தைப்
போதிக்கவேயான
உலகம்...

இந்த யுகம்
யாருக்குதான் சொந்தமாம்?
யாதும் ஊரே
யாவரும் கேளீர்
என்றிருக்கே...?

**கவிஞர்.பூ.ஆசு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுங்கவிதைகள்

த. இர்ஃபான்

1
உனது கூந்தலின் வகிடில்
நெற்றிச்சுட்டி ஆட்டம்போடுவதை
சிறுவனைப்போன்று காண்கிறேன்
கற்களை சேகரிப்பதென்பது
கற்கால வழக்கு முறை

2
காதலைப்பற்றி யார் என்ன
சொன்னாலும்
நான் அப்படியே ஒப்புக்கொள்வேன்
ஏனென்றால் நான் காதலிக்காக
பிறந்தவன் என்பதை விட
காதலுக்காக பிறந்தவன் என்றே
ஒவ்வொரு முறையும் உணர்கிறேன்

3
எல்லோருக்கும் எளிதாக
வாய்த்து விடுவதில்லை
வாழ்வியலின் பொருள்

4
பொங்கலுக்கு இலவச அரிசி
அரசாங்கம் கொடுக்கிறது
உழவர்களை பதம் பார்த்து

5
சூடு சுரணையற்று
மரத்துப் போய்விட்டது
வாழ்க்கை

6
மருதாணி இட்டு
அழகு பார்க்கிற
நீ
வெறும் தினத்தை கூட
விசேசமாக்குகிறாய்

7
அணுகுண்டைப் பற்ற வைத்து
அணைப்பதுப்போல் ஆகி விடுகிறது
எதேச்சையாய் உன்னை
பார்த்துச் செல்கையில்

8
தூக்கி வாரிப்போட்டது
அடகுப்பிடிக்கும் கடைக்காரன்
சாவதுப்போல்

9
நான் புலம்புவதற்காக தான்
என் கண்களில் தோன்றினாயோ
தெரியவில்லை
நான் புலம்பாமலே
இருந்திருந்தேனென்றால்
புலவனின் மகிமையே
விளங்காமல் போயிருக்கும்

10
பருவ மாற்றம் தவறும்போது
எனது வெப்பநிலை மாற்றத்தை
எதைக்கொண்டு சமன் செய்வது

11
பிரிவும் நமக்கில்லை
பரிவும் நமக்கில்லை
துப்பறிவதே காதல் உலகு

12
கண்கள் துடித்துக்கொண்டிருந்தன
விட்டமின் குறைவு என்றார்கள்
விட்டமினைத் தேடிச்செல்கிறேன்

13
நீ போதும் போதுமென்று
சொல்லும் அளவிற்கு
ஊட்டி விட வேண்டும்
என் மனசால்
உன் மனசில்
காதலை

14
எரிந்து சாம்பலாகி
அதன் பின் உயிர்த்தெழுந்து
மறுசுழற்சியாய்
ஒரு காட்டைப்போல தான்
என்னுள் வியாபித்திருக்கிறாய்

15
சாதிச் சான்றிதழ்களெல்லாம்
கொளுத்தப்படாமலே
எரிந்து போய்விடுகின்றன
எங்கேயாவது நடக்கும்
காதல் திருமணத்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தீபாவளிப் பண்டிகை ஏன் கொண்டாடப்படுகிறது?

நரகாசுரன் என்ற அரக்கன் ஒருவன் இருந்தான். அவனுக்கு இந்த மூவுலகமும் தன் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும் என்ற பேராசை இருந்தது. தேவர்கள் கூட தன் காலடியில் கிடக்க வேண்டும் என நினைத்து, இந்த ஆசைகளை நிறைவேற்ற பிரம்மனை நோக்கி கடும் தவம் இருந்தான்.

பிரம்மனும் தனக்காகத் தவம் இருந்த நரகாசுரனுக்கு, அவன் கேட்கும் வரங்களை அள்ளிக் கொடுத்தார்

எல்லோருக்கும் துன்பம் விளைவித்து வந்த நரகாசுரன் தேவர்களையும் முனிவர்களையும் கொடுமைப்படுத்தியது மட்டுமல்லாமல், தனக்கு வரம் கொடுத்த பிரம்மனை எதிர்த்தே போர் தொடுத்தான்.

வரங்களைக் கொடுத்து விட்டு நரக வேதனைகளை அனுபவிக்க வேண்டி இருக்கிறதே என்று காக்கும் கடவுளான கிருஷ்ண பகவானிடம் பிரம்மன் முறையிட்டார்.

இதனால் கிருஷ்ண பகவான் நரகாசுரனிடம், பெற்ற வரத்தை தவறான வழியில் பயன்படுத்துதல் நியாயம் அல்ல என்று முறையாகச் சொல்லி பார்த்தார்.

ஆனால் நரகாசுரன் கேட்பதாக இல்லை. இதனால் கோபம் அடைந்த கிருஷ்ண பகவான், நரகாசுரனை போருக்கு அழைத்து, தம் சக்கராயுதத்தால் அவனின் உடலை இரு கூறாகப் பிளந்தார்.

இறக்கும் நிலையில் இருந்த நரகாசுரன், கிருஷ்ணனின் காலை பிடித்து, ''பகவானே நான் செய்த பாவங்களை மன்னித்து விடுங்கள். என்னுடைய சாவு கெட்டவர்களுக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும். கொடியவனாக நான் இறக்கும் இந் நாளை மக்கள் அனைவரும் அல்லல் நீங்கிய நன்னாளாக மங்களகரமாகக் கொண்டாடி மகிழ வேண்டும்'' என்று வேண்டினான்.

கிருஷ்ண பகவானும் அவ்வாறே அவனுக்கு அருளினார். இதனால் தான் நரகாசுரன் இறந்த நாளை, கொடியவனை அழித்த மன நிறைவு விழாவாக இந்துக்கள் தீபாவளிப் பண்டிகை யென கொண்டாடி வருகின்றனர். இவ்விழாவை ஒளிவிழாவென்றும் அழைக்கப்படுகிறது. உலகம் நல்லொளியால் நிறையட்டும்.

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதலின் முடிவு கல்லறை

காலத்தின் சூழ்ச்சியில் சுழன்று
காவியம் பாடிய காதல் "நம்
கருவறை உயிர்பெறும் முன்பே
கடவுளும் எழுதிய கதையே...

மௌனத்தின் மொழியிலே கொன்றாய்
மனதுக்குள் மரணங்கள் தந்தாய்
இதயத்தில் இருந்து சென்றாய்.
பின்பு எதற்கடி மீண்டும் வந்தாய்..

கோடையில் பூத்த மலர் போல்
வாடைக் காற்றிலே நானும் தவழ்ந்தேன்
கண் ஜாடைகள் காட்டிடும் போது
கற்பனை ஆற்றிலே மிதந்தேன்..

நாணத்தின் வில்லை நீயேந்தி
என் மார்பினை ஏனடி சிதைத்தாய்
காதல் பாணத்தில் அம்புகள் எய்து
எங்கே தான் கொன்றென்னைப் புதைத்தாய்.

நான் கல்லறைத் தோட்டம் செல்ல
நடைபாதையை நீயே அமைத்தாய்
அந்தக் கம்பனை மீண்டும் எதற்கு
நம் காவியம் பாட அழைத்தாய்..

**ரசி குணா**



## பேனா

அறிவுக்கண் திறக்கும் திறவுகோல்
அதி அற்புத மந்திரக்கோல்
எழுத்தறிவித்த இறைவனாய்
மகுடம் சூடும் ஏழாமறிவு

**நாராயணி ராம்**
பருத்தித்துறை

## மலைக் காதல்

சின்னத் தாயி உன் நினைப்பு
சிறு நெருஞ்சிப் போல் குத்துதடி
பொறுமையை நானும் தினம் இழந்து
வறுமைக் காதலில் வாடுகின்றேன்

மலைக்குள் குறிஞ்சி மரம் பூக்க
மாலைச் சூரியன் ஒளி பரப்ப
வாழைக் குமரி உன் ஆசை
வந்து என்னைக் கொல்லுதடி

கூடைக்குள் எந்தன் மனதை வைத்து
குறும்புச் சிரிப்புடன் நடை பயின்று
அரும்பையும் மொட்டையும் அழகாய் பறித்து
ஆருயிர் அன்பே ஏன் மறந்தாய்

புன்னகைப் பூத்த முகமெழில் போதும்
பொன்னகை வேண்டாம் என் காதலியே
உன் மாமன் தவியாய் தவிக்கின்றேன்
ஒரு வார்த்தைச் சொல்ல வாராயோ

விசும்பை முட்டும் மலைத் தொடர்கள்
பசுமைப் போர்த்திய பசுந் தளிர்கள்
ஆசிகள் கூறி எம்மை வாழ்த்த
ஆனந்த கும்மியும் கொட்டுதடி.

**ராஜ்பாரதி**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## காலம் உள்ள வரை...

விட்டுப் பிரியும் உறவு
தொட்டுச் செல்லும் காற்று
எனைத் தழுவிச் செல்லும் தென்றல்
சல சல வென்று பாய்ந்து விழும் அருவி

சில்லென்று குளிரச் செய்யும் பனிக்கூழ்
உன் நினைவின் ராகங்கள்
இதய மெங்கும் இசை பாடும்

என் சோகங்கள், ரணங்களுக்கும்
மருந்தகம் நீ தானே
நீ தரும் ஆறுதல் வார்த்தைகள் மட்டுமே
ஒத்தடங்களாய்...

என் மனசெல்லாம் அள்ளிடும் பூக் குவியலே
நீ மட்டும் என் அருகில் இருப்பாயானால்
இமயம் கூட கை தொடும் தூரமே

என் தினக்குறிப்புப்
புத்தகத்துப் பக்கமெல்லாம்
உன் புன்னகையின் பூச்சரங்கள்

என்னவனே காலம் உள்ள வரை
உன் நேசமும் பாசமும் எனை
அரவணைக்கட்டும் ஆராதிக்கும் அன்போடு

**ஃபாயிஷா ஸஷ்மாஹ்**

## மனம் இருத்தம்...

எழில் நிறைந்த பகலும்
தனித் திருந்து வாழ்ந்தால்
நிழல் போர்த்திய நினைவாய்
மனம் இருத்தி மாளும்...

**வடகரை செல்வன்**

## மகிழ்ச்சி

நீல வானில்
நிலவும் காத்திருக்க,
நந்தவனத்தில் ரோசாவும் பூத்திருக்க
உன் முகம் பார்க்க
மண்டியிட்டுக் காத்திருக்கும்
மலர் விழியைப் பார்த்து விட்டால்
மானினமும் துள்ளி ஓடும்
வண்டினமும் ரீங்கரித்து
வட்ட மிட்டு க் கவி பாடிடுமே
மனதிற்குள் உன் முகமோ
மகிழ்ச்சி தனை உரைத்திடுமே !

**ஷாமிளா**

## ஹைக்கூ

•
தார்ச்சாலையின் நிறத்தை
அடர்த்தியாக்குகிறது
புளியமர நிழல்

•
மொட்டைப் பனை
உச்சிவரை படர்கிறது
எனது பார்வை.

•
விரைவாகச் சாலைகடக்கும்
கீரிப்பிள்ளையின் வாலில்
ஒரு வைக்கோல்துண்டு

•
வானம் பார்த்தே
நெல் நடவு செய்கின்றனர்
வயலில் பெண்கள்.

•
இன்னும் நிமிர்ந்தபாடில்லை
கஜா புயல் சாய்த்துப் போட்ட
சவுக்கு விவசாயியின் வாழ்க்கை

**மகிழ்நன் மறைக்காடு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகங்கள்...... உயிர்ப்புலன்கள்...!

நிணங்கொத்தி நிணங்கொத்தி நீளலகு கறைபடிய
பிணந்தேடிப் பிணந்தேடிப் பேய்ச்சிறகு விரித்தபடி
யூமாடிக் விழியோடு ஊரெங்கும் சுற்றிவந்து - அட
தீமூட்டிக் குளிர்காயும் நீயுமொரு ஜர்னலிஸ்ட்டா?
சத்தமாகச் சீறுவார்முன் சீரியசாய் மைக்நீட்டி
கத்திக் கதறுவாரைக் காமிராவில் சுட்டபடி
பித்தாக அலைகின்றாய் பிணக்காட்டில் இரைதேடி - அட
கொத்தாகச் செத்துவிழும் கூட்டந்தான் ப்ளாஷ்நியூசா?
கவர்ஸ்டோரி என்றாலே கண்றாவி கதைதானா?
எவனோடே எவள்போனாள் எனக்குப்பைக் கிளறுவதா?
புலனாய்வு பெயராலே பொய்ச் சேதி பரப்புவதா? - அட
கலகத்தை விதைக்கின்ற கதைகட்டல் எகஸ்க்ளூசிவ்வா?
உப்பில்லாச் செய்திகளை உருப்பெருக்கிக் காட்டுகின்ற
தப்பான தகவல்கள் தானுந்தன் ஸ்கூப்நியூசா?
அப்பாவி மக்களழும் அடிவயிற்றைக் கலக்குகின்ற - அட
ஒப்பாரிச் சத்தந்தான் உன்காதில் சிம்பொனியா?
பாலியலின் பாடமென பக்கங்கள் நிரப்புவதா?
நூலிடையர் மேனியினை அம்மணமாய்க் காட்டுவதா?
வானியலை அறிவியலை வளர்த்தெடுக்க முயலாமல் - அட
ஊனியலை நம்பித்தான் உன்வாழ்வா...? த்தூ...வெட்கம்!
மூளையினில் நோய்க்கிருமி மொய்க்கவிடும் சீரியல்கள்!
வேளையெல்லாம் திரைபார்த்து விரையமாகும் மனிதசக்தி!
" ஹாய்... வியூவர்ஸ்.." அலட்டலிலே அரைகுறையாய் உடுப்பழகி! - அட
தேய்ந்தழியும் பண்பாட்டின் சின்னமான சேனல்கள்!
பேனாவைத் திறப்பதெல்லாம் நாற்ற எழுத்தெழுத!
ஆனாலும் இவ்வளவா அந்தரங்க வெளிச்சங்கள் ?
ஊடகங்கள் என்பனதாம் ஓர்நாட்டின் உயிர்ப்புலன்கள்! - அந்தக்
கேடயங்கள் இன்றிங்குக் கேடகங்கள் ஆகலாமா?



வெற்றிப்பேரொளி

[ இந்தக் கவிதையை வேறு வடிவில் எழுத எனக்குத் தோன்றவில்லை - தனித்தமிழ் ஆர்வலர்களிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்.]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொட்டுக்களின் மெட்டுக்கள்

மதிப்புரை : வஃபீரா வஃபி




கிழக்கு மாகாணத்திலுள்ள பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வெளியீடாக, 69 பக்கங்களுடன் வெளி வந்திருக்கும் 'மொட்டுக்களின் மெட்டுக்கள்' எனும் சிறுவர் பாடல்களின் தொகுப்பு நூலானது கவிஞர் ஏரூர் கே. நௌஷாத் அவர்களின் படைப்பாகும்.

வாசிக்கும் ஆவலைத் தூண்டும் உரையே அக்கவிஞரின் கவிப்புலமைக்கு சான்று பகர, இனிய பாடல்களுடன் ஒரு உலாப் போகத் தொடங்குகிறேன்.

இன்றைய காலத்து சிறுவர்களின் தேவையறிந்து, அழகாய் வடிவமைத்து இனிப்புடன் கலந்து படையலாகத் தந்திருக்கும் இக்கவிஞரைப் பாராட்டியே ஆகவேண்டும்.

நேர்மறை எண்ணங்களைச் சிறுவர் மனங்களில் விதைக்கும் பணியைத் திறம்படச் செய்து, ஒரு பொறுப்பான ஆசிரியரை எமக்கு அடையாளப் படுத்திச் செல்கிறது இந்நூல்.

மாணவமணிகளின் மனங்களை அள்ளும் வகையில், பாடல் ஒவ்வொன்றும் மிக நேர்த்தியாகப் படைக்கப் பட்டிருப்பது படிக்கும் மழலைகளை நன்னெறிப் படுத்தி, அவர்களை வெற்றிப் பாதையில் விரல் பிடித்தழைத்துச் செல்லும் என ஆணித்தரமாகச் சொல்லலாம்.

சில பாடல்களைப் பார்ப்போமானால் 'புத்தகம் படிப்போம்' எனும் தலைப்பில்,

சிறந்த அறிவால் புகழ் சிறக்கும்.
சிகரம் தொடவே அறம் நிறைக்கும்
இறந்த பின்னும் பெயர் நிலைக்கும்
இருக்கும் போதும் இடம் கிடைக்கும்

எனக் குறிப்பிட்டு புத்தகம் படிக்கும் ஆர்வத்தைத் தூண்டுகிறார்.

உயிர்களை நேசிக்கக் கற்றுக் கொடுக்கிறார் எப்படியெனப் பாருங்கள்! 'கொல்லும் உரிமை உலகில் எவர்க்கும் கிடையாது. பயிரைக்கூட தேவையின்றி பறித்து எறிய முடியாது

'நுளம்பே கடிக்காதே' எனும் பாடலில், 'சுத்தமில்லாச் சூழலினால் சுதந்திரம் தந்தது எம் தவறு' என எம் வாழ்வியலின் பிழைகளை அனாயாசமாய் ஒப்புக் கொள்ளும் விதம் அற்புதம்!

எறும்பு சொல்லும் பாடம் சிறார்களை மட்டுமன்றி எம்மையும் சிந்திக்க வைக்கின்றது.

ஒற்றுமையாய் உணவு தேடி
உண்டுக் களிக்கிறோம்.
ஒழுக்கமாக வரிசையாக
நின்று பயில்கிறோம்.
கற்றுத் தந்து சுறுசுறுப்பைக்
காட்டி நிற்கிறோம்..
கடைபிடிப்பீர் சிறுவர்களே
எமது செய்கையை

எனக் கற்றுக் கொடுக்கிறது.

பொறுமையின் சிறப்பைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடும் பாடலும் அற்புதம்! ஓரிடத்தில் தமிழையும் பாரதியையும் சேர்த்தே அழகு படுத்துகிறார் .

கன்னல் மொழியில்
தமிழும் அழகு
தமிழை நிகர்த்த
பாவும் அழகு
தந்தார் அந்த
பாரதி அழகு

என்னவோர் அழகியல்! கவின்மிகு வரிகள் இக்கவிஞரோடு இசைந்தே பிறக்கின்றன போலும்.

மர நடுகையின் சிறப்புக் கூறு கையில்,

வேற்றுமையைக் காட்டாமல்
வழங்கிடுமே வரங்கள் தான்

என அசத்துகிறார்.

விட்டுக் கொடுப்போம்
அயலவர்க்கு
வெளிச்சம் கொடுப்போம்
அனைவருக்கும்

முயற்சி செய்தால் முன்னேற்றம்
முடியும் என்பதே ஈடேற்றம்

அழகு சொட்டும் வரிகள் சிறுவர் மனதில் பசுமரத்தாணியாய் பதியும்.

வாசிப்பின் மகத்துவத்தை வலி யுறுத்தும் ‘புத்தகம் படிப்போம்’, ‘நூலகம் சென்றிடு’,’ வாசிப்பை நேசிப்போம்’, ஒற்று மையை உணர்த்தும் ‘காக்கை’, மாணவ மணிகளுக்குச் சேமிப்பைக் கற்றுக் கொடுக்கும் ‘உண்டியல்’, நற்பண்புகளைப் புகட்டும் ‘சிந்தையில் ஏற்போம்’ என்பவை சிறப்பு!




மரம் வெட்டுவதன் விளைவு களைச் சொல்வதிலாகட்டும், ‘காடு’ எனும் தலைப்பில்

சுத்தமான காற்றைத் தரும்
சுதந்திரமாய் மழையைத் தரும்
மொத்தமாகக் குளிர்ச்சி தரும்
மூலிகைகள் எல்லாம் தரும்

எனக் காடுகளின் சிறப்பைச் சொல்வதி லாகட்டும், வானவில்லின் வனப்பைக் குறிப் பிடும் பாடலாகட்டும், ஆசான்களை மதிக்க நாசூக்காகக் கற்றுக் கொடுப்பதிலாகட்டும், இரட்டைக் கிளவியை இலகுவாக மனதில் பதியச் செய்யும் பணியிலாகட்டும், ‘திசையும் நிறமும் சுவையும்’ பாடலில், பாடத்தை எளிதாய் மனதில் நிலைநிறுத்தும் பக்குவமாகட்டும், பாடல்கள் முழுக்கத் தன் முத்திரையைப் பதித்துள்ளார் கவிஞர்.

ஒவ்வொரு பாடசாலையிலும் இருக்க வேண்டிய இந்நூல், நல்லாசானாய் மாணவ மணிகளுக்கு வழி காட்டும் என்பது திண்ணம்.

பாடல்களென்னும் பழச்சாற்றை சிறாருக்குப் பிடித்த (தலைப்புக்) கிண்ணங்களில் பரிமாறியிருக்கும் இவரின் பாடல்கள் அனைத் தும், மிக எளிதாக சிறுவர்களைச் சென்றடையும். இன்மொழியால் அவர்களைப் பயில வைக்க நினைக்கும் இவரின் நோக்கமும் இனிதே நிறைவேறிடும்.

இவர் இன்னும் பல நன்னூல் களை இச்சமுதாயத்துக்குத் தந்து, வெற்றிவாகை சூடவேண்டுமென வாழ்த்துகிறேன்.

இந்த நூலைப் பெற்றுக்கொள்ளத் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

அல் அமீன் புத்தகசாலை
பிரதான வீதி
(Coop வைத்தியசாலை முன்பாக)
ஏறாவூர்
0771803233 / 0778205177


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமை

தனித்திருந்த பொழுதுகள்
தடுமாற்றத்துடனே கடக்கின்றன
காணும் காட்சி யாவும்
காட்சிப் பிழைகளாய்..!

சின்னச்சின்ன சந்தோசங்களும்
சுவாரஸ்யம் கூட்டவில்லை.
விரலொடித்து..நகங்கடித்து..
மேனி முறுக்கி
சோம்பலாய் நகர்கிறது
தனிமை..!

என்னுள் உன்னையும்
உன்னுள் என்னையும்
காணாது ஏமாந்து போகிறது
காலம்..!

கனவுகளின் வழித்தடத்தில்
காட்சிகள் நகர்கின்றன.
வண்ணமயமாய் இல்லாமல்
கருப்பும்..வெளுப்புமாய்..!

**- அனுராஜ்.**
போடிநாயக்கனூர்.தமிழ்நாடு





## ஓவியங்கள் ஒளிமயமாகுமா

சிற்றூர் சிறந்திடும்
சித்திரமாய் இவ்வுலகில்
சற்றும் அயராத
சலிப்பில்லா உழைப்பாலே...!

செயற்கைக்கு இடமின்றி
செழிப்புடன் வாழ்ந்தார்கள்
இயற்கையை இறைவனாக
இசைந்த காலத்திலே...!

உழைப்பை உரிதாக்க
உடன்படாத மானிடம்
உழவை நேசித்து
உற்றப் பயனென்ன...?

ஓவியங்கள் ஆகிடுமா
ஒளிமயமாய் புவிதனிலே
காவியமாய் பூமியினை
காத்து அருளிடவே...!!!

**க.இரவிச்சந்திரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்யுணர்தல்

●
காலியான
ஆல்கஹால் புட்டிகளும்
நிக்கோட்டின்
மிச்சமிருக்கும்
சிகரெட் துண்டுகளும்
ஆங்காங்கே
விழுந்து கிடக்கின்றன.

●
மொட்டை மாடியிலிருக்கும்
ஓலைக் குடிசையின்
மேசை இழுப்பறையில்
மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிறார்கள்....
மில்டனும்
ஷெல்லியும்
வேர்ட்ஸ் - வொர்த்தும்
தாகூரும்...

●
முட்டுச் சந்தின்
முகப்பில்
குறுந்தாடியுடன் இருக்கும்
ஒருவன்
அமாவாசைத் திருடன் போல்
நோட்டமிட்டபடியே அலைகிறான்...
கைலியின்
இடுப்பு மடிப்பில்
சின்னச் சின்ன "பொட்டலங்களுடன்"

●
மாற்றுத் துணிகளாய்
கொடியில்
உலர்ந்து கொண்டிருக்கும்
மேல்சட்டைகளும்
கால்சட்டைகளும்
சாயம் வெளுத்துப் போயிருந்தன....
அவனைப் பற்றிய. குறியீடாய்.

●
எலும்பும் தோலுமாயிருந்த
தெருநாய் படுத்துக் கிடக்கும்
அந்த. குப்பைமேட்டில் கிடக்கின்றன...
அடித்தல் திருத்தல்களுடனான
வரிவடிவங்கள் தாங்கிய
காகிதக் கட்டுகள்.

**ஜென்ஸி**

# காதல்

**தன்முனைக் கவிதைகள்..**



●
உன்னை எங்கு
ஒளித்து வைப்பேன்..?!
எங்கு வைத்தாலும்
ஒளிரும் சூரியன் நீ..!!

●
உன்னை இதயத்தில்
ஒளித்து வைத்தேன்..
எனது இதழ்களில்
விரிகின்றாய் புன்னகையாய். .

●
உனக்காக எழுதும்
பொழுதெல்லாம்..
எனது பேனா முனை
பேசுகிறது காதலை..

●
உறவின் வேர் நுனிகளில்
அன்பின் அடி நாதத்தில்
அவன் எனக்கானவனென்ற
அகந்தை சத்தம் கேட்கிறது..

●
உன் மீதான கோபத்தில்
நான் தனியாக தவிப்பதை விட
என் அகந்தை அகற்றி
உன்னை சரணடைவது மேல்..

●
அதிகமாக ஒன்றும் தெரியாது
காதலைக் குறித்து எனக்கு
எதிரில் நீ வந்த பொழுது
எனது தேடல் நிறைவுற்றது..

●
உன் இதயத்தின்
அருகாமை போதும்..
தேடிப் பிடித்து கூறும்
சொற்களில் என்னவிருக்கிறது..?!

**சாரதா க. சந்தோஷ்**
ஐதராபாத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் (மத்தா)ப் பூக்கள்!

“கவியன்பன்” கலாம், அதிராம்பட்டினம்

இருளை
இதய நோயை
கந்தகத் துகள்களைக்
கலந்த உரத்தில்
கொத்தாய்ப் பூத்த
மத்தாப் பூக்கள்!

நம்மைப் பூரிக்க வைக்க
நாடோறும் துன்பத்தை,
வெம்மையைத் தனக்குள்
விரும்பி ஏற்ற தியாகப் பூக்கள்!

வெடிச் சிரிப்பூக்கள்
வெடித்துச் சிதற
வெடி வைத்து
விளையாடி மகிழ
விடியாத வாழ்வை ஏற்ற
விடிகாலைப் பூக்கள்!



உடல் முழுதும் கந்தகத்தின்
உஷ்ணத் தாக்கத்தை
வாசனைப் பொருளாகப் பூசி
வாழ்வாதாரமாக்கி நாட்டின்
பொருளாதாரத்தின்
ஆதாரப் பூக்கள்!

சீனத்தின் வித்தைகளைச்
சீண்டாமல் நாமும் இந்த
மானத் தமிழரின்
மத்தாப்புகளை வாங்கினால் - இவரின்
மனமெல்லாம் மத்தாப்பூக்கள்
மனமுவந்து துடைப்போம் - இவரின்
கண்ணீர்ப் பூக்களை!!!

புத்தாடை யுடுத்திப் புதுசுகம் கண்டு
மத்தாப்பூக் கொளுத்தி மகிழு மினியநாளில்
கொத்தாக இந்தக் குதூகலத்தை நமக்களித்த உழைப்பின்
வித்தான ‘சிவகாசி’ மீதன்பு மறந்தநிலை!
சிந்தையில் ஆயிரம் தேந்துளியாய் வான்முழுக்க
விந்தை விரிக்கும் விளக்கொளியில் – சந்தமுடன்
முந்தைய நாட்களில் மூண்ட இருளகற்ற
வந்தது தீபா வளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஹிட் வெள்ளி

எஸ். வினுபாரதி

பக்கத்து வீட்டு சங்ரம்மாவின் ஐந்து வயது மகள் ப்ரியாவிடம் வந்து," தம்பிப் பாப்பாவுக்கு காய்ச்சல். அம்மா உங்ககிட்ட 100 ரூபா வாங்கிட்டு வரச் சொன்னாங்க " என்று, அந்த பிஞ்சு மழலை மொழியில் சொல்ல, ப்ரியாவிற்கு கோபம் தலைக்கேறியது.

"ஏண்டி... ஒங்கம்மாவுக்கு என்னக்கி காசு கேக்கறதுன்னு வெவஸ்தையேயில்ல. வெள்ளிக் கிழமயும் அதுவுமா, காலங்காத்தால. போடி, போய், 'இல்லே'ன்னு சொல்லு" என்று சொல்லும்போதே,

"ஏய் ப்ரியா" என்று கூப்பிட்ட படி வந்தான், ப்ரியாவின் கணவன் அழகர்.

"போன மாசம் உங்கப்பாவுக்கு இருதய ஆபரேஷன் பண்ணினோமே... அன்னிக்கு என்ன கிழமை ?" என்று ப்ரியாவைக் கேட்க,

ப்ரியா, "வெள்ளிக் கிழமை" என்றாள்.

"ஆபரேஷனுக்கு டாக்டர் கட்டச் சொன்ன ஒரு லட்சத்த, நம்ம ரமேஷ், அவன் ஒய்ஃபோட நகைய அடமானம் வெச்சுக் குடுத்தான். 'வெள்ளிக் கிழமையாச்சே'ன்னு, ரமேஷோட பொண்டாட்டி நினைச்சிருந்தா, ஒங் கப்பா உயிரோட இருந்திருப்பாரா? இறந்திருப்பாரு. வெள்ளிக் கிழமையும், செவ்வாக் கிழமையும் உடம்புல உயிர் இருக்குற மட்டுந்தான். பர்ஸ்ல பணம் இருக்கு. 100 ரூபாயக் குடுத்தனுப்பு" என்றபடி, சாமி அறைக்குள் சென்றான் அழகர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதை சொல்லா பாட்டிகள்...

## நௌஷாத் கான் லி

எங்க குடும்பத்திலேயே நான் தான் கடைக் குட்டி. ரொம்ப வருஷம் தவம் இருந்து பிறந்த பையன் என்கிறதாலே வீட்ல அதிக செல்லம். குறிப்பாக பாட்டி என் மேலே உயிரையே வைத்து இருந்தாள். என் அப்பாவின் சாயலை அதிகம் நான் கொண்டிருந்ததால் பாட்டிக்கு என் மீது அதிகளவு பாசம். பாட்டிக்கு என் அக்காவை அவ்வளவாக என்னளவுக்கு பிடிக்காது. காரணம் அம்மாவை போல் அதிகம் வாயாடுவாள். பாட்டியை கிழவி கிழவி என்று சொல்லி வெறுப் பேற்றுவாள் .

பாட்டியை எனக்கு ரொம்ப பிடிக்க காரணம் அவள் சொல்லும் கதைகள் தான். அவள் சொல்லும் கதையை கேட்ட பின்பு தான் இரவில் தூங்குவேன்.. ராஜா ராணி கதைகள், பேய் கதைகள், பஞ்ச தந்திர கதைகள், மாயாஜாலக் கதைகள், காட்டு விலங்கு கதைகள், நீதி நெறிக்கதைகள், என்று ஒவ்வொரு நாளைக்கு ஒவ்வொரு கதைகளை சுவாரஸ்யமாய் அழகாய் சொல்லுவாள்

கதை சொல்வது மட்டுமின்றி சோறு ஊட்டி விடுவது, குளிக்க வைப்பது என என்னுடைய எல்லா வேலைகளையும் அம்மாவை விட பாட்டி தான் அதிகம் செய்வாள். சில நேரங்களில் நான் கால் சட்டையிலேயே மலம், சிறுநீர் கழித்து விட்டால் கூட பாட்டி தான் சுத்தம் செய்வாள் பாட்டி என் மேல் உயிராய் இருந்தாள். அம்மா சில நேரங்களில் அடிப்பாள் அது மாதிரி சமயங்களில் ஏன்மா அவன் சின்ன புள்ளதானே ஏன் அடிக்கிற என்று சத்தம் போட்டு விட்டு என்னை அன்போடு அணைத்து கொள்வாள் பாட்டி ..

என் மீது எப்போதும் அன்புடன் இருக்கும் பாட்டியை அம்மாவை விட ரொம்ப பிடிக்கும். ஒவ்வொரு இரவும் பாட்டி சொல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைகள் கேட்ட பின்பு தான் கனவுகளும், உறக்கமும் வரும் ஆனால் இப்போது அது மாதிரியான அழகான நாட்களை நினைத்து பார்க்க மட்டும் தான் முடிகிறது.

பாட்டி என்னிடம் அடிக்கடி கேட்பாள் பெருசா வளர்ந்தா இந்த பாட்டிக்கு என்ன செய்வ என்று?

உனக்காக பெரிய பங்களா, பெரிய தோட்டம் பெரிய பெரிய காரு எல்லாம் வாங்கி தரேன் பாட்டி என்று சொல்லுவேன். நான் சொன்னதும் பாட்டி ரொம்பவும் சந்தோசப்பட்டு கொள்வாள். இருந்தாலும் பாட்டியின் விழிகளின் ஓரத்தில் கண்ணீர் நிறைந்திருக்கும். எங்க அப்பா சின்ன வயசா இருக்கும் போதே தாத்தா மாரடைப்பு வந்து இறந்துட்டார். பாட்டி நாலு பசங்களை வயல் வேலை, வீட்டு வேலை பார்த்தே காப்பாத்துச்சு. பாட்டி வாழ்க்கையில் பட்ட கஷ்டங்கள் கொஞ்சம் நஞ்சமல்ல. பல போராட்டங்களுக்கு பிறகு பாட்டி இந்த சமுதாயத்தில் உழைத்தே முன்னுக்கு வந்தவள். நாலு பிள்ளைகளுக்கும் தன்னாலே முடிஞ்ச அளவு சொத்தை பாட்டி சேர்த்து வச்சு நாலு பிள்ளைகளுக்கும் நல்ல படியா கல்யாணமும் பண்ணி வச்சுதாம் அப்பா பாட்டியோட வாழ்க்கைப் போராட்டங்களையும், கஷ்டங்களையும் அதிலிருந்து மீண்டு வந்த கதையையும் பல முறை பேசி சிலாகித்தது உண்டு. பிள்ளைகளுக்காகவே வாழ்ந்த



# வாழ்வேன்...

அன்பில் திளைக்க
ஆசைப்பட்டு
இன்பம் தரும் என்று எண்ணி
ஈரமே இல்லாத
உன் மேல் காதல் கொண்டு
ஊனமாய் போனேன்...
என் ஏழு ஜென்ம பாவங்களும்
ஏழுநாள் காதலில் தொலைந்தன என எண்ணி
ஐயமின்றி இனியொரு புதுவாழ்வு கொள்வேன்
ஒளிமயமான வாழ்க்கையை
ஓராயிரம் ஆண்டுகள் வாழ்வேன் நீயே
ஔவியம் கொள்ளுமளவு
அஃதே என் காதல் எனக்கு கொடுத்த பரிசு...

**ச.சிவகணேஷ்** BE.,
பால்குளம், தூத்துக்குடி மாவட்டம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டி யார் கண் பட்டதோ எனக்கு பன்னிரண்டு வயதாக இருக்கும் போது கேன்சர் நோய் வந்து இறந்து விட்டாள்.. பாட்டியின் மரணம் என்னை என்னவோ செய்தது. பாட்டி கதை சொல்லாமல் உறக்கமே வர வில்லை எத்தனையோ இரவுகள் பாட்டியின் நினைவால் உறங்காமல் தவித்து இருக்கிறேன். பாட்டியின் மீது அளவுக்கடந்த அன்பு வைத்ததால் என்னவோ பாட்டியின் நினைவுகளிலிருந்து அவ்வளவு சீக்கிர மாக மீள முடிய வில்லை. ஒரு இரண்டு வருடம் பாட்டி நினைப்பாகவே இருந்தது. காலங்கள் காயங்களை மாற்றும்... வயதும் கூடியது... பக்குவமும் வந்தது.

சில வருடங்களுக்கு பிறகு...

இப்போது இந்த சமூகத்தில் நான் மிக பெரிய எழுத்தாளன்... என் கதைகளை படித்தவர்கள் ஆஹா ஓஹோ என்று பாராட்டுகிறார்கள் இந்த பெருமைக்கும், புகழுக்கும் காரணம் என் பாட்டி தான். சிறு வயதிலேயே எனக்குள் விதைத்த விதை இன்று மரமாக வளர்ந்து இருக்கிறது. என்னை போல் என் மகனுக்கு இந்த கொடுப்பினை எல்லாம் கிடைக்காது . ஏன் என்றால் என் அம்மா, மனைவி, சகோதரி எல்லாருமே குழந்தைகளுக்கு கதைகளை சொல்லாமல் சீரியலில் மூழ்கி இருக்கிறார்கள்.

வருங்கால பேரப் பிள்ளைகள் கதை சொன்ன பாட்டிகளை பாட புத்தகத்தில் மட்டுமே படிப்பார்கள். ■

# அனுபவித்து வாழ்வோம்

தினமும்
எத்தனை
நிகழ்வுகள்
வாழ்க்கையிலே

நேற்று போல
இன்று இருப்பதில்லை

இன்று போல
நாளை வருவதில்லை

இன்று வாழ்பவர்
நாளை வாழ்வதில்லை

அன்று உறவை
நாடிச் சென்றோம்

இன்றோ அலைபேசியில்
மகிழ்ந்துப் பேசுறோம்

இளையோர்
முதியோராவது
வயது ஏற்றமே

வறுமை நிலையால்
பணமின்றி ஏழைகளாவதும்

பண வசதிப் படைத்த
பணக்காரர்களாவதுமே

ஒவ்வொரு நாளும்
நிகழும் சுழற்சியே

நாம் நலமுடன்
வளமுடன் தரணியில்

உணர்ந்து வாழ்க்கையை
அனுபவித்து வாழ்வோமே...!

**கவிஞர்.மரு.கி.ம. எழிலன்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உந்தன் வெற்றிக்கு ஏது தடை

நாம் வலசை போகும் புள்ளியினம்
நம் வேடந்தாங்கல் பள்ளியன்றோ
ஒருதாய் மக்கள் நாங்களென
ஓடி விளையாடினோமே துள்ளியன்றோ

ஒற்றைக் கண்ணழுதால் துடைக்க
ஓராயிரம் கரங்கள் நீளும்
ஒற்றுமையே பலமென ஓங்கி
உரைத்திடுவோம் நாளும்

திறமைகட்கெல்லாம் திறவுகோல்
தந்தே சீராக எமை மாற்றினரே.
உயர்ந்திட நாமும் பாடுபட்டு
உழைப்பெனும் ஏணியில் ஏற்றினரே

அறிவெனும் பாதையில்
ஆன்றோர்கள் கைப்பிடித்தே
அழகான அகிலத்தைக் காட்டினரே
எழுத்தறிவித்த இறைகள் எல்லாம்
ஏழாம் அறிவை ஊட்டினரே

மண்ணாய் கிடந்தோரை
மானுடராக்கிய இடம்
சிலையாய் இருந்தோர்க்கும்
சிறகுகள் கொடுத்த இடம்
சருகாய் பறந்தோரைச்
சரமாய் கோர்த்த இடம்
சோம்பித் திரிந்தோரை
சுறுசுறுப்பாய் பார்த்த இடம்

சாதி,குலப் பேதங்கள் இங்கு இல்லை
மதப் போதைகள்
என்றுமே கொண்டதில்லை
வேற்றுமொழிகள்
தொல்லை தந்ததில்லை
நட்புக்கு இங்கு ஏது எல்லை

ஆசான்கள் என்றும்
அகக்கண்ணின் ஊற்று
ஆணவம் மறந்தே இதை அறிவில் ஏற்று
அன்னைத் தமிழை நீ என்றும் போற்று

சாதியம் பேசினால் சாட்டை எடு
சமூகச் சாக்கடையைத் தூர்வாரு
துன்பங்களை யெல்லாம்
அடித்துத் துரத்து
இன்பங்கள் மெல்ல ஏறுமுன் தோள் மீது

பெற்ற பட்டங்கள் காற்றில் ஆடுதே
எட்டுத்திசைகளும் நமையே தேடுதே
தோல்விகள் துவண்டே ஓடுதே
தோழர்கள் பலமின்னும் கூடுதே

பூங்காற்றாய் எங்கும் நீ வீசு
புது மலராய் நீயும் மணம் வீசு
வெண்ணிலவைக்
கைபிடித்து நடைபழக்கு
வேற்றுக்கிரகத்திலும் உந்தன்
பேரைச் செதுக்கு

எந்த தேசத்தில் நீயிருந்தாலும்
எல்லைகள் தாண்டி நீ பறந்தாலும்
இணையவழி ஒன்று கூடு
இடைக்கிடை வந்து நேரில் முகம் காட்டு
நட்பை என்றும் கொண்டாடு

தைரியமே உந்தன் துணை
வெற்றிக்கு ஏது தடை
பத்துவிரல் உந்தன் படை
புத்தம் புது சொர்க்கம் படை

போகும் பாதையெங்கும்
பூத்தூவும் புதுவசந்தம்
பூச்செண்டு தந்துனை
வரவேற்கும் எதிர்காலம்

கற்றோர்க்கு சென்ற இடம்
யாவும் சிறப்பாகும்
கல்லூரி நாட்களே
நம் வாழ்வில் வரமாகும்

**தமிழ் நிலா**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஒருயிர்

இரவின் இருளையும், நிசப்தத் தையும் கலைத்தபடி அந்தப் பேரூந்து வளைந்து நெளிந்த பாதைகளினூடே பயணத்தைத் தொடர்ந்தது. பயணிகள் அனைவருமேஆழ்ந்தஉறக்கத்திலிருக்க, வயதான ஒரு பெரியவர் மட்டும் இருக்கையில் சாய்ந்தவாறே பலத்த சிந்தனையில் மூழ்கிப் போயிருக்கிறார். ஜன்னலூடே அடிக்கடி இருளை வெறித்துக் கொண்டிருந்தவர் விழிகளில் நீர்த்திவலைகள் திரண்டு, அந்தக் காரிருளிலும் பளபளத்தன. சரியான நேரத்திற்கு ஊர் போய்ச் சேர்வோமா என்ற சந்தேகம் ஒருபுறம்.முப்பத்தைந்து வருடங்கள் கடந்த நிலையில், சொந்த மண்ணில் என்னென்ன மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும் என்ற எதிர்பார்ப்பு மறுபுறம். பிறந்த மண்ணிலேயே தான் அன்னியமாக உணரப்பட்டு விடுவோமா என்ற அச்சம் இன்னொரு புறமுமாய் அவரை அலைக்கழித்துக் கொண்டிருந்தன. சட்டென வெளியான பெருமூச்சொன்று பேரூந்தின் இரைச் சலில் மௌனமாக மறைந்தது.

மெதுவாகக் கண்கள் மூடிக் கொள்ள,இதயக்கதவு வேகமாகத்திறந்து கொண்டது.நினைவுப் பேழைக்குள் பொக்கிஷமாய் பூட்டி வைத்திருந்த கடந்த கால ஞாபகங்கள் மடை திறந்த வெள்ளமென மளமளவெனப் பொங்கி வழிய ஆரம்பித்தன.

அந்த சின்னஞ்சிறிய கிராமம் பல வண்ண மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு ஒளிமயமாகக் காட்சியளித்தது. ஒலிபெருக்கியின் ஒலியோடு, ஊர்மக்களின் பேச்சும் நகைப்பும் அரட்டைகளும் போட்டி போட்டுக் கொண்டு ஒலித்தன. ஊர்த்திருவிழாவுக்காக ஊரே ஒன்று திரண்டு, கேளிக்கை களியாட் டங்களில் ஈடுபட்டிருக்க, வாலிபர் கூட்டம் வழக்கமான கலகலப்போடு

ஷெய்க் நிஸ்ரா

ஒருபக்கமும், வண்ண மயில்களென காரிகைகள் பட்டாம்பூச்சிகளாக இன் னொருபுறமும் வட்டமிட, சிட்டாகப் பறக்கும் சின்னஞ் சிறார்கள் உலகை மறந்து உவகைக் களிப்பில் திளைத்திருந்தனர். இவற்றை வேடிக்கைப் பார்த்தபடி தத்தம் வேலைகளில் கவனமாயிருக்கும் ஊர்ப் பெரியோர்கள் என ஊரே விழாக்கோலம் பூண்டிருந்தது.

வாலிபர் கூட்டத்தில் அவன் கலகலவெனப் பேசி எல்லோரையும் ஈர்த்துக் கொண்டிருந்தான். சராசரியை விட சற்றே உயரமான உருவம். அதற்கேற்றபடி கச்சிதமாய் பொருந்தும் உடல்வாகு. மாநிறத்துக்குச் சற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவான நிறம். பளீரென மின்னும் புன்னகை தனித்துவமாக அவனை அடையாளப் படுத்திக் காட்ட, அக்கிராமத்தில் கட்டிளங்காளையாகத் திகழ்ந்தான். ‘சங்கரன்’ தன் நற்குணம், நேர்மை, பணிவு, உதவும் மனப்பாங்கு என்பவற்றால் ஊர்மக்கள் மனதில் சிம்மாசனமிட்டு அமர்ந்திருந்தான். நண்பர் குழாமோடு கும்மாளமிட்டுக் கழித்திருந்தாலும், அவன் விழிவண்டு களோ அங்குமிங்கும் அலைபாய்ந்து, ஒரு பூவின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தன. சில நொடி நகர்வில் காரிகைக் கூட்டத்தில் தன்னவளைக் கண்டு கொள்ள பூரித்துப் போனான்.

அவள் அந்தக் கிராமத்தில் சற்று வசதியான குடும்பத்தில் பிறந்த ஒற்றைப் பெண். சிறுவயதில் தாயை இழந்து, தந்தையின் பாசப்பிணைப்பில் கட்டுக் கோப்பாக வளர்க்கப்பட்டவள். எல்லோராலும்‘செல்லம்மா’எனஅன்பாக அழைக்கப்படும் ‘செல்லா’வுக்கு அன்பும் அடக்கமும் தான் அடையாளங்கள். தோழியர் பேச்சுக்களைத் தலையாட்டி ரசித்தவளின் விழிகள் அவன் விழிகளைச் சந்திக்க, அவை ஆயிரம் கதைகள் பேசின.

எங்கே எப்போது எப்படி ஆரம்பித்ததெனப் புரியாத ஒரு இன்பத்தில் சிக்கித் தவித்தாள் அவள். எதேச்சையாக அங்குமிங்குமாக சந்தித்த சங்கரனின் பார்வையில் தன் இதயத்தைத் தொலைத்தவளானாள். பரிமாறிக் கொண்ட பார்வைகள் தம் இதயங்களையும் இடமாற்றிச் செல்ல, இவர்கள் காதலும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தது.

‘கிரீச்’ என்ற சத்தத்துடன் பேரூந்து குலுங்கி நின்றபோது, பழைய ஞாபகங்கள் கலைந்து போக புரியாமல் விழித்த பெரியவரை, சக பயணியின் தகவல் ஆசுவாசப் படுத்தியது. இருளில் குறுக்கே வந்து விழுந்த ஏதோ ஒரு விலங்கைக் காப்பாற்ற வண்டி ஓட்டுனர் ப்ரேக் போட்டதைத் தெரிந்து படபடத்த இதயம் நிதானப்பட, நெஞ்சோடு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணைத்திருந்த பையிலிருந்த தண்ணீர் போத்தலில் சில்லென்றிருந்த குளிர்நீரைப் பருகியதும், அமைதியான மனதுடன் பார்வையை வெளியில் செலுத்த, பேரூந்து ஏதோ ஓர் அத்துவானக் காட்டைக் கடந்து ஆழ்ந்த இருளில் பயணித்துக் கொண்டிருந்தது. சில்லென்ற குளிர்காற்று இதமாக முகத்தில் மோதி, கிராமத்து மண் வாசனையை நாசியில் நிறைக்க, மூடிய இமைகளுக்குள் மீண்டும் கடந்தகால நினைவுகள் காட்சிப் படலங்களாக விரிந்தன.

சந்தர்ப்பசூழ்நிலைகள்சங்கரன்-செல்லம்மாவுக்குக் களமமைத்துக் கொடுக்க, மௌன மொழிகளால் பேசியவர்கள் வார்த்தைகளையும் பரிமாறிக் கொண்டார்கள். அவன் தன் உள்ளக்கிடக்கையை அவளிடம் கொட்டிச் சம்மதம் கேட்க, அவளோ நாணிச் சிவந்து, தலை குனிந்து கால்விரல்களால் தரையில் கோலமிட, அதுவே அவள் சம்மதத்தைச் சொல்லாமல் சொன்னது.அதன் பின்னும் பல சந்திப்புகள் ஐந்தடி இடைவெளியில் தொடர்ந்தன.அவன் பேசப்பேச விழிகள் விரித்து தலை சாய்த்து ரசித்துக் கேட்பாள். பதிலுக்கு அவள் விழிகளே அவனுடன் மௌனமொழி பேசின.

மூடிய இமைகளை மீறிச் சிதறிய கண்ணீர்த்துளிகளை, மெலிந்து தளர்ந்து போன தன் கரத்தால் துடைத்தபடி சுற்றிலும் பார்வையைச் சுழல விட்டார் பெரியவர். பயணிகள் அதே உறக்கநிலையிலிருக்க, தெளிந்த மனதோடு மீண்டும் இருக்கையில் தலைசாய்த்துக் கொள்ள, வரண்டு போன அவர் உதடுகள் அவருக்கு மட்டுமே கேட்கும் தொனியில் 'செல்லத்தாயீ' என உச்சரித்தன. அந்த உச்சரிப்பில் உச்சந்தலை சிலிர்த்தது.

தாயில்லா செல்லம்மாவை தந்தை மிகப்பாசத்துடனும் பரிவுடனும் வளர்த்து வந்தார். தன் உயிரின் பாதியாகவே கருதினார்.'செல்லத்தாயீ' நெகிழ்வாக அவர் அழைக்கும் ஒவ்வொரு முறையும், பாசத்தில் கரைந்தே போய்விடுவாள். சங்கரன் கூட அவளைத் தன்னுயிராய் கருதுவதாலோ என்னவோ, அவனும் அவளை 'செல்லத்தாயீ' என்றே அழைத்தான். அப்போதெல்லாம் அவளின் விழிகள் பனிப்பதைப் பார்த்திருக்கிறான்.

துக்கமும் ஏக்கமும் ஒருங்கே இயலாமையின்பலவீனத்தோடு,நெடிய பெருமூச்சொன்றை வெளிப்படுத்தியது. கிராமங்களில் காதல், சந்திப்புகள் எல்லாம் குதிரைக்கொம்பான நிலையில், ஐந்தடி இடைவெளியில் பார்வைப் பரிமாற்றங்களும், அவன் ஐந்து வார்த்தைகள் பேசினால் 'ம்' என்ற ஒற்றை வார்த்தையுடன் நகர்வதும் அவர்களுக்குரிய சந்தோஷக் கணங்கள். நினைத்தது எல்லாம் இறையருளால் இனிதே நடக்கும் என்ற நம்பிக்கையில் சிட்டாய் சிறகடித்துக் கொண்டிருந்தவனுக்கு அந்த ஒரு சந்திப்பு பேரிடியாகவும், இறுதியாகவும் இருக்குமெனக் கனவிலும் நினைத்திருக்கவில்லை.

வழமைக்கு மாறாகத் தோழியரோடு வழமையாக சந்திக்கும் இடத்திற்கு அவள் வந்திருந்தாள். சோகம் அப்பிய முகத்துடன் வந்திருந்தவள், நிறைய அழுதிருப்பாள் எனத் தோன்றியது.அவன்உயிருக்குள்ஏதோ ஓர் இனம்புரியாத வலி ஊடுருவிச் சென்றது. முதல்முறையாக இதழ் திறந்து நிறையப் பேசினாள். தான் பிறந்தது முதல் தன்னை வளர்க்க ஒற்றை ஆளாக தந்தை பட்ட கஷ்டங்களையும், தன் எதிர்காலத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு கணமும் அவரின் கனவாக இருந்ததென்பதையும், அவள் பிறந்த போதே அவளுக்கு மாமன் முறையான ஒருவனுக்கு நிச்சயித்துத் தீர்மானம் செய்யப்பட்டிருந்ததையும், தன் தந்தை சொல்லச் சொல்ல பூமி கால்களுக்குக் கீழ் நழுவுவதை உணர்ந்தவள் பதறிப் போனதையும் சொன்னாள்.ஆயினும் தந்தையின் வாக்கு தன் வாழ்க்கையை விட முக்கியமானது எனவும், அவரை எதிர்த்து எந்தவித முடிவும் எடுக்க முடியாத கையறு நிலையில் தானிருப்பதாகவும் அழுகையினூடே திக்கித் திணறி அவள் விவரித்தபோது, அவனும் உருகிப் போய் ஊமையாக நின்றான். தன்னுயிரைச் சிதைக்கும் வார்த்தைகளை அவளால் எப்படிக் கோர்வையாகப் பேச முடிந்ததோ எனக் கலங்கித்தான் போனான்.

கிராமப்புற விழுமியங்களோடு விழுதூன்றிப் போன அந்தப் பேதைப் பெண்ணின் வார்த்தைகளுக்கு மறு வார்த்தை பேச அவன் தாய்மொழி கூட இசையவில்லை.வார்த்தைகளை வெளியிடத் தயங்கிய அவன் உதடுகள் ஒரு வெற்றுப் புன்னகையை உதிர்க்க, அதுவே அவளுக்கு ஆயிரம் அர்த்தங்களைப் புகட்டிச் சென்றது. அவள் உள்ளுக்குள் நொறுங்கி, சில்லுச்சில்லாகச் சிதறித்தான் போனாள். கண்ணீரோடு திரும்பிச் சென்றவள் சில அடிகள் நடந்து திரும்பி நின்று நிதானித்து, அவனைப் பார்த்துச் சொன்னாள் 'ஒன்ன இப்படி என்னால பார்க்க முடியல.தயவு செஞ்சி ஏடாகூடமா ஏதும் முடிவு எடுக்காத. ஒன்னக் கும்பிட்டுக் கேட்டுக்கிறேன். எங்கேயோ நீ உயிரோட இருப்பே னு நெனைப்போட வாழ்ந்துக்குவேன். ஆனா, உனக்கேதும் ஆச்சு ன்னா அடுத்த நிமிஷம் என் உசுரும் போயிடும். இப்போ மட்டுமில்ல,எப்பவும்தான்.இது சத்தியம் ' அவளின் இறுதி வார்த்தைகள்

# இம்சிக்கும் இன்பங்கள்

அத்தனைபேர் மத்தியிலும்
அழகாய் பரிமாறும்
நொடிப் பார்வை....

யாருமறியாமல்
தொட்டதே தெரியாமல்
சட்டென்று மறையும்
சிறு தீண்டல்....

சந்தித்த பொழுதுகளையே
எண்ணி எண்ணி
மனம் போடும் ஆட்டம்...

தொலைவிலுள்ள போதும்
அருகாமையை நாடி
செல்பேசியையே
நோக்கும் விழிகள்...

செல்லச் சண்டைகளால்
செருக்குடன் வரும்
சிறு கோபங்கள்...

தூக்கம் தொலைத்து
ஏக்கம் நிறைத்து
வாட்டி வதைத்த
அந்த பொழுதுகள்....

நினைத்தாலே
நெஞ்சில் கள்ளூறும்
இம்சிக்கும் இன்பங்கள்.....!

**ராஜிலா ரிஸ்வான்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான் கவியெழுத பாலு நீ பாடு

உனக்காக அழுதுவிட்டு
மீண்டும் என்னைத் தேற்றுகிறேன்...
தேற்றுகிறது உன் குரல் !
**
நிலவைப் பார்க்கிறேன்
உன் முகம் நினைவுக்கு வர...
என்னோடு இணைகின்றாய் செவியறையில்!
**
தனிமையில் நிற்கிறேன்
மனதைத் தடவிக் கொடுக்கிறது...
உந்தன் நிலாப் பாட்டு !
**
நீண்ட பேருந்துப் பயணம்
நினைக்க நினைக்க இனிக்கிறது...
பாலுவின் இடைக்காலப் பாடல் !
**
ஒற்றையடிப் பாதை
நான் அசைந்து கொண்டே செல்கிறேன்
அசைப்பதோ உன் னிசைக் குரல் !
**
இரயில் வண்டிச் சத்தம்
இறங்கிய பின்னும் கேட்கவில்லை...
கேட்டதெல்லாம் உன் குரலே !
**
இரவைப் போர்த்திய உன் குரலில்
தொடர்ந்து...
குளிர் காய்வதோ எனதுள்ளம் !
**
இளையராஜாவின் இசை
இணைந்திருக்கிறது உன் குரல்...
வேறென்ன வேண்டும் எனக்கு ?
**
நீ இறந்துவிட்டாயாம்
வலிக்கு இசை தேடினேன்...
மருந்திட்டுக் குணப்படுத்துவது நீதான் !
**
உன்னைப் புதைத்த இடத்தில்
எந்த மரங்கள்...
இசையெழுப்பப் போகின்றனவோ?
**
உன் கல்லறைக்கு அருகில்
என் வீடு இருக்கட்டும்...
நான் கவியெழுத... பாலு நீ பாடு !

**ஜே.ஜம்ஷீத்**

கண்ணீரில் கரைந்து காற்றோடு கலந்து, அவன் நாடி நரம்பெங்கும் ஊடுருவிச் செல்ல அவள் வார்த்தைகளே அவன் வாழ்க்கையானது.

'செல்லத்தாயீ நீ சந்தோஷமா வாழனும். பூவும் பொட்டுமா நீண்ட ஆயுசோட வாழனும். அது போதும் எனக்கு.' முப்பத்தைந்து நீண்ட வருடங்கள் தன்னையே ஏமாற்றிக் கொண்டு, ஏதோ ஒரு வீறாப்பில்... மறக்கப்பட வேண்டும் என நினைக்கும் நிகழ்வுகள் மறக்கப் படாமலேயே, கனவாகிப் போன வாழ்க்கையின் ஞாபகங்கள் சுகமான சுமைகளாக அவன் வாழ்க்கைப் பயணம் தொடர்கிறது.

அவளுடனான அந்த இறுதிக் கணங்கள், நரகமாகி நகர மறுத்தாலும் அவைதான் அவன் வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருக்கின்றன.

பிறந்து வளர்ந்த ஊரையும், உறவுகளையும், நண்பர்களையும் விட்டு நகரம் நோக்கி நகர்ந்தான். புதிய ஊர், புதிய வாழ்க்கை, அறிமுகமற்ற முகங்கள் எனப் பழகி அறிமுகங்களால் உறவாகி, வழக்கமற்ற பழக்கங்கள் பின்னாளில் பழகிப் போயின. எத்தனை எத்தனை மாற்றங்கள், இந்த நீண்ட இடைவெளியில்... ஒன்றைத் தவிர. அது அவளின் ஞாபகங்கள். அவைதான் அவனை உயிராக இயங்க வைத்துக் கொண்டிருக்கின்றன.

மீண்டும் தான் பிறந்த மண் ணுக்குப் போக வேண்டும் என்றோ, அவளை சந்திக்க வேண்டுமென்றோ அவன் நினைத்ததேயில்லை. ஆனால், சில தினங்களுக்கு முன் நள்ளிரவில் திடீரென விழிப்பு வந்ததும், நெஞ்சில் ஏதோ ஒரு வலி உண்டானதும் கண்ணுக்குப் புலப்படாத இரு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரங்களால் நசுக்கப் படுவதைப் போல் உணர்ந்ததையும் வெறும் பிரமையென அற்பமாக அவனால் ஒதுக்க முடியவில்லை. உறங்கிக் கிடந்த பழைய நினைவுகள் விழித்து, உயிரைப் பறிப்பதாக உணர்ந்தான். ஏதோ விபரீதம் நிகழப் போவதாக உள்ளுணர்வு சொல்ல, அடிமனதில் புதைத்து வைத்த ஆசைகள் பேராசை யாகி அசுரத்தனமாக அவனை ஆட்டிப் படைக்க ஆரம்பித்தன. ஒரே ஒருமுறை அவளை எட்ட இருந்தாவது பார்த்து விடவேண்டும் என்ற உந்துதல், தனக்குத் தானே போட்டுக் கொண்ட வேலி தாண்டி, தள்ளாத வயதிலும் இப்பயணத்தைத் தொடங்க வைத்தது. இத்தனை வருட வாழ்விலும், இந்த இரவு மட்டும் விடியாமலேயே ஏன் இன்னும் நீண்டு கொண்டிருக்கிறதோ? எப்படியும் விடியும் வேளை ஊரைச் சேர்ந்து விடலாம் எனும் நினைப்பு துயரங்களையும், சோர்வையும் தூக்கித் தூரப் போட்டது.

ஒருநாளுமில்லாத திருநாளாய் என்னாயிற்று இன்று? இரவு உண வுக்குப் பின் வழக்கமான பத்து நிமிட நடையுடன் தூக்கம் கண்ணைச் சுழற்றுமே! இன்று ஏன் தூக்கம் இமைகளைத் தழுவ மறுக்கிறது? தலையில் ஏதோ கிறுகிறுக்க ,அந்த அழகிய கிராமத்தில், பெரிய வீட்டின் வசதியான அறையொன்றில், உறக்கம் வராமல் போராடிக் கொண்டிருக்கிறாள் செல்லத்தாயி. மகன், மருமகள், பேரக் குழந்தைகளென கூட்டாக வாழ்ந்தா லும் தனிமை விரும்பி அவள். குடும்ப விசேசங்களின் போதும் அவள் ஒதுங்கியே இருப்பாள். தன் சாம்ராஜ்யமாகக் கருதும் தன் அறையில் இருப்பதையே விரும்புவாள். பறவையொன்று தன் கூட்டுக்குள் எவ்வளவு குதூகலமாக இருக்குமோ அதே உணர்வுடன் அவளும்....

உணர்வுகளோடு போராடிப் போராடி இளமைக் காலத்தைத் தொலைத்தவளுக்கு இப்போது உடல் தளர்ந்து, உள்ளம் சோர்ந்து போய் கிடக்கிறது. இனிப் போராடத் தெம்பில்லை. மூப்பின் பலவீனங்களோடு மட்டுமே இப்போது போராட்டம். இன்று ஏனோ பழைய ஞாபகங்கள் அவளை வாட்டி வதைத்துக் கொண்டிருக்க,அந்த இளமை உணர்வுகள், அதனால் ஏற்பட்ட வலிகள், அன்பு நிறைந்த ஓரிதயத்தை துண்டாக்கிச் சிதறடித்த நினைவுகளுமாக உறுத்தலாக இருந்தது. தான் மட்டும் சிறந்த ஒரு மகளாக, தந்தையின் கனவுகளை நிறைவேற்றியதும், யந்திரத்தனமான இல்லறவாழ்வில்,மகனின் பிறப்பால் சற்றே மாற்றம் உண்டானதும், தனக்காகவே அர்ப்பணிப்புடன் வாழ்ந்த தந்தையின் மறைவும் அதன் பின் வாழ்வில் தோன்றிய துன்பங்களை மறந்து மகனைச் சிறப்பாக வளர்த்து ஆளாக்கி, அவன் மனம் விரும்பியவளைக் கைப்பிடித்துக் கொடுத்து,நோய்வாய்ப்பட்டகணவனின் கடமைகளை முகம் கோணாமல் செய்து, அவரின் இழப்பையும் தாங்கி,. அத்தனையும் தாண்டி எப்படி வாழ்கிறேன் எனப் புரியாவிட்டாலும், தைரியமாகவும் சுறுசுறுப்பாகவும் வாழும் இவ்வாழ்க்கை... எல்லாமே காட்சிகளாக விரிய அவள் கண்களில் கண்ணீர்.

அதையெல்லாம் தாண்டி உயிரில் எழுதிய முதற்காதலின் வலி இன்னும் இதயத்தில் ரணமாக... முப்பத்தைந்து வருடங்கள் அடிமனதில் நீறுபூத்த நெருப்பாக மறைத்து வைத்த சங்கரனின் நினைவுகள் இன்று இதயத்தைச் சுட்டது. ஒருமுறை கூட அவன் ஊருக்கும் வரவில்லை. சந்திக்கவும் முனையவுமில்லை. எங்கிருக்கிறான், எப்படி யிருக்கிறான்? திருமண வாழ்க்கை எப்படிக் கழிந்திருக்கும்? பிள்ளைகள், பேரக்குழந்தைகளோடு குதூகலித்திருப் பானா? விபரங்கள் அறியவும் முடியாமல்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேதைமனம் குழப்பத்தில் ஆழ்ந்தது.

ஒரே ஒருமுறை அவன் முகங் காண ஆவல் கொள்ள... இருளரக்கனின் ஆதிக்கத்திலிருக்கும் நடுநிசியில், முதுமையின்தளர்ச்சியும்,உணர்வுகளின் தாக்கமும் ஒன்று சேரக் கொஞ்சம் கொஞ்சமாக சோர்ந்து போகிறாள். தாகத்தில் நா வரள, அருகிருக்கும் நீர்க்குவளையைக் கையிலெடுக்கக் கூட தெம்பின்றி,கைகால்கள் உணர்விழந்து போக, பார்வையும் தெளிவின்றி எங்கோ அழைத்துச் செல்லப்படுவதைப் போல்,அவசரமாகப் புறப்பட வேண்டும் போலொரு உந்துதல். இத்தனையிலும் அவள் சிந்தனை மட்டும் தெளிவாக இருந்தது. மங்காத அவன் முகம் அவள் கண்களில் நிழலாட 'செல்லத்தாயீ' ஈனஸ்வரத்தில் அவன் குரல் மிக மிக அருகில் ஒலிக்க, அது கனவா நனவா எனப்புரியாமல்அவளுதடுகள்எதையோ முணுமுணுக்கின்றன. 'என்னை மன்னிச்சிடு சங்கரா' வார்த்தைகள் வெளிவரவில்லை. இமைகளும் திறந்த படியிருக்க உயிர் காற்றோடு கலந்து மறைந்தது.

பொழுது நன்றாகப் புலர்ந்து விட்டது. ரம்மியமான அந்த விடியல் பொழுதை ரசித்தவாறே ஒவ்வொரு பயணியாகப் பேரூந்திலிருந்து இறங்க, சங்கரனோ இருக்கையில் சாய்ந்தவாறே சற்றே தலை சரிய, ஆழ்ந்த உறக்கத் திலிருந்தார். நடத்துனர் அவர் அருகில் வந்து 'ஐயா! ஊர் வந்தாச்சு. எந்திரிங்க' எனத் தொட்டெழுப்ப மீளாத்துயிலில் ஆழ்ந்த அவருடல் சரிந்தது.

எந்தவொரு பந்தத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளாத சங்கரன் ஒண்டிக்கட்டையாகவே அவரின் இறுதி நாள் வரை அவரின் 'செல்லத்தாயீ' நினைவுகளுடன் வாழ்ந்து முடித்திருந்தார். ஒருமுறை அவளைப் பார்த்தால் போதுமென பிறந்த மண்ணை நோக்கிப் புறப்பட்டு வந்தவர் கடைசியில் அவளைப் பாராமலேயே மண்ணில் கலக்க, அவரின் உயிரோ, அன்புக் குரியவளின் உயிரோடு சங்கமித்து விட்டது. உடல்கள் அழியலாம்.உறவுகள் பிரியலாம். அன்பு கொண்ட ஆன்மாக்கள் உலகம் உள்ளவரை உயிர்ப்புடன் இயங்கும். வாழ்வில் இணையமுடியா இரு உயிர்கள் மரணத்தில் இணைந்து ஓருயிர் ஆனது.

■

## ஏக்கம்!

வனத்தின் நாபிக்கொடி
வாசத்தில் திரும்பவியலாத
எதிர்திசையில்!

மூச்சு தொடும் தூரம் நீயிருக்க..
மூர்ச்சையாகி நானிருக்கிறேன்!

அந்திகவியத் தொடங்கி விட்டது!
உச்சுக்கொம்பில் அமர்ந்திருந்து
சொட்டவிழும் தூறலின் துளியே!

பராபரமாய் தியங்கி
விரைந்தெனை
விந்தையில் மூழ்குவிப்பாயோ!

**ச. ஜெயலட்சுமி**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீபாவளி ஸ்பெஷல் ஸ்வீட்

# நவரத்தினப் புடிங்

### தேவையான பொருட்கள் :

கடற்பாசி (அகர் அகர் தூள்)150 கிராம்
பச்சை, மஞ்சள், சிவப்பு நிறமூட்டிகள்
(ஃபுட் கலரிங்) சில துளிகள்
சவ்வரிசி 100 கிராம்
பால் அரை லிட்டர்
இனிப்பூட்டிய கட்டிப்பால்
(மில்க் மெயிட்) 300மி.லி
சர்க்கரை தேவையான அளவு
ஸ்ட்ரோபெரி அல்லது
ரோஸ் எஸன்ஸ் சில துளிகள்



### செய்முறை :

முதலில் சவ்வரிசியைக் கழுவி வைக்கவும். கடற்பாசியை 375மி.லி நீரில் கலந்து கொஞ்சம் சர்க்கரை சேர்த்து, கொதிக்க விடவும். நன்கு கரைந்ததும் மூன்றாகப் பிரித்து பச்சை, சிவப்பு, மஞ்சள் நிறங்களைச் சேர்த்து ஆற விடவும். சவ்வரிசியை கொதிநீரில் போட்டு வெந்ததும் வடிகட்டிக் கொள்ளவும்.பிறகு பாலைக் காய்ச்சி, இனிப்பூட்டிய கட்டிப்பாலைச் சேர்க்கவும்.சுவைக்கேற்ப சர்க்கரை கலந்து, சவ்வரிசியைச் சேர்க்கவும். செட்டான கடற்பாசியை சிறுதுண்டுகளாக வெட்டி, ஒரு செவ்வக அல்லது வட்ட வடிவ பாத்திரமொன்றில் போடவும்.பின்பு, சவ்வரிசிக் கலவைக்கு சில துளிகள் ஸ்ட்ரோபெரி அல்லது ரோஸ் எஸன்ஸ் கலந்து வெட்டி வைத்த கலவையிலிட்டு லேசாகக் கலக்கி ஆறவிடவும் .பிறகு ஒரு தட்டில் கவிழ்த்துவிட்டு வெட்டிப் பரிமாறலாம். கலர்ஃபுல்லான இந்த புடிங் குழந்தைகளுக்கு ரொம்பப் பிடிக்கும்.



குறிப்பு- மாம்பழ,ஸ்ட்ரோபெரி, எலுமிச்சை சுவைகளில் கடையில் கிடைக்கும் ஜெலியையும் கடற்பாசிக்குப் பதிலாகப் பயன் படுத்தலாம்.

**சுதா சந்திரமூர்த்தி**
உடுமலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்ந்துக் காட்டுவோம் வா அறுசீர் விருத்தம்.

வேதனை உன்றன் நெஞ்சில்
வேலென தினமும் பாயும்!
சோதனைக் கண்டு நீயும்
சோர்ந்திடா துழைக்க வேண்டும்!
சாதலும் உன்னைத் தேடி
சாலையில் விரைவாய் வந்தே
தீதனை அள்ளி வீசி
தீங்கினைத் தந்தே போகும்!

முகத்திலே நன்மைச் சொல்லி
முதுகிலேத் தீயை மூட்டி
முகத்தினைச் சோகம் தாக்க
முள்ளினைப் பரப்பி வைப்பர்!
அகத்தினைக் கெடுக்கும் தீதை
அன்றைநீ மறக்க நன்மை!
பகட்டினை விலக்கி வைக்க
பலப்படும் உன்றன் வலிமை!

துணிவுடன் எதிர்த்து நிற்க
துன்பமும் விலகி ஓடும்!
ஏணியென உயர்நது நிற்க
ஏக்கமும் கரைந்து போகும்!
நாணிநீ ஒதுங்கி நிற்க
நலிவடை யும்உன் வெற்றி!
தனித்துவ மாக நின்று
தரணியில் நிலைத்து நில்லு!

தூற்றிய உறவு முன்னே
தூணென வாழ்ந்து வந்தால்
ஏற்றிடும் ஏணியால் உன்னை
ஏற்றியே வைப்பர் மக்கள்!
ஆற்றிடும் செயலில் மங்கா
ஆவலைக் காட்டு என்றும்!
பற்றிடு நல்லோர் சொல்லை
பலமிடும் வாழ்வின் தொடக்கம்!

நஞ்சையே வார்த்தை யாக
நல்குமே உனக்கு நாளும்!
வஞ்சமே கடமை யாக
வலிமையாய் நலமாய் செய்யும்!
தஞ்சமாய் தேடி வந்தால்
தள்ளியே வைத்துப் பார்க்கும்!
கஞ்சனைப் போலே என்றும்
கருணையே யிலாது வாழும்!

துச்சமாய் நினைப்பர் முன்னே
துணிந்துநீ நடந்திட வேண்டும்!
எச்சமாய் நினைப்பர் முன்னே
எழுந்திடு புயலாய் நீயும்!
அச்சமும் துறக்க வாழ்வில்
அரும்பிடும் அழகிய எண்ணம்!
இச்சையாய் நினைத்தோர்
முன்னே
இமயமாய் உயர்ந்து நில்லு!

ஏழ்மையை எடுத்துக் காட்டி
ஏளனம் செய்வான் மூடன்!
தாழ்வினை சுமந்து நீயும்
தாழ்ந்திட வேண்டாம் நண்பா!
வாழ்விலே வெற்றி தோல்வி
வாடிட வைக்கும் உன்னை!
வாழ்க்கையை நலமாய் மாற்றி
வாழ்ந்திட லாம்வா நண்பா!

**- நா. பாண்டியராஜா.**
ஆர்.எஸ்.மங்கலம்.

---

முத்தமிழ் கலசம் இதழ்கள்
அனைத்தையும்
https://muththamizh-kalasam.com
இணையத்தில் சொடுக்கிப்
படிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரியன்பன் - கவிதைகள்

தங்கத்தாலான
ஆயுதமாயினும் அதனால்
தீங்கு நிகழும் பட்சத்தில்
அதைப் பிரயோகித்தவருக்கு
தண்டனை நிச்சயம்.

இருட்டிலும்
வைத்த கண் விலகாமல்
எதிரிலிருக்கும் சுவரைப்
பார்த்துக் கொண்டிருக்கிறது
நிலைக்கண்ணாடி.

நானும் அவளும்
எதிரெதிரே வெகு நேரமாகப்
பேசிக் கொண்டிருப்பதாய்
நினைத்துக் கொண்டிருந்த
வேளையில்...
தன்னை மெய் மறந்த நிலையில்
எங்களைக் காதலித்துக்
கொண்டிருந்தது காதல்.

நெஞ்சில் பாய்ந்த தோட்டா
கண்ணில் உறுத்தும் தூசி
இரண்டும் ஒரே வலி.

என் பெயரில் ஒருத்தனும்
உன் பெயரில் ஒருத்தியும்
தீவிரக் காதல் செய்ய
நாம் மழலைகளானோம்.

எரியும் முட்புதரை
வேகமாய் கடந்து பயணித்த
பட்டாம்பூச்சியின் உயிர் மீண்டது
அதன் சிறகுகளிலும்
தேனருந்தும் குழல்களிலும்தான்
லேசான தீக்காயங்கள்.

காற்றை நேசித்து
நூலுக்குப் பணியாத பட்டங்கள்
ஆகாயம் காண்பதில்லை.

நினைவுகளில் வாழ்பவன்
எஞ்சிய காலத்தின் மீதத்தை
அவன் கனவுகள்
தின்னத் தருகிறான்.

என்னவளின் கூந்தல்
மொத்தமாய் உடைந்ததில்
கொஞ்சம் இரவானது
மீதம் மழை மேகமானது.

வசந்தம் நிபந்தனைகளற்று
மண்மேல் செய்யும்
வசீகரங்கள் அனைத்தையும்
உன்னிடத்தில்
நான் செய்ய வேண்டும்.

**பாரியன்பன்**
குடியாத்தம் - 632602





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீ எந்தன் மனமேடை !



நறுமலரே ! என்னுறவே
நலம்தானா ? பெண்ணழகே
ஒருயுகம்போ லானதடி
உன்னுடனே யான்பழகி
பொறுமையெனும் சொல்லுக்குப்
பொருளாகிக் காத்திருக்கேன் !
மருமகளாய் என்தாய்க்கு
வருவதென்று என்னவளே ?

மொழிகின்ற பேச்சினிலே
முல்லைமலர்த் தேன்சொரிவாய் !
விழியென்றக் கருவண்டை
வீசிடுவாய் மயங்கிடுவேன் !
அழிவில்லாப் பொற்றமிழே
அறிவாயோ என்னிலமை ?
அருகினிலே இறுத்திவைத்து
அருங்கவிகள் படைத்திட வா..

தந்தைதாய் அறிந்துவிட்டார்
தடைமேலும் தந்துவிட்டார்
சிந்தையெலாம் நொந்ததடி
சின்னவளே உன்னில்லம்
வந்திடவே என்னுள்ளம்
நாளெல்லாம் எண்ணுதடி
எந்நாள் வந்திடலாம்
என்னவளே சொல்கண்ணே !

கற்றதமிழ் பயனாகயான்
கவிபாடி அழைக்கின்றேன்
பெற்றவர்சூழ் பெண்ணிலவே
பெருவாழ்வைக் கண்டிடவே
உற்றதுணை நானிருக்கேன்
உள்ளத்தில் பயமேனோ ?
வற்றாத சுனைநீரே
மடிதன்னில் ஆடிடவா !

**தமிழ்நெஞ்சம் அமின்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org